
www.tamilarangam.net

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
TELO

# விடியல்



## இணைந்த கரங்கள் உயர்கையில் இருளும் பின் வாங்கும் இனி!

தமிழ் ஈழ விடுதலை இயக்க
பிரச்சார ஏடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தைச்**
**சர்வதேசமயப்படுத்துவோம் !**

**தமிழ் பேசும் மக்களது விடிவில்**
**பங்காளராவோம் ! !**

சர்வதேச பயங்கரவாதிகளால் வலுப்பெற்று வரும்
ஸ்ரீலங்கா பேரினவாத அரச கொலை வெறியர்களின்
கோரக் கரங்களால் அழிந்துவரும்
இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களது
விடிவுக்கான போராட்டத்தைச் சர்வதேசமயப் படுத்தி,
தமிழ் பேசும் மக்களது விடிவில்
பங்காளராகுமாறு
அகில உலக மனிதாபிமான சக்திகளை
அன்புடன் வேண்டுகின்றோம்.

- பிரச்சாரப் பிரிவு,
தமிழ் ஈழ விடுதலை இயக்கம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

TELO

# தமிழ் ஈழ விடுதலை இயக்க பிரச்சார ஏடு

விடியல் 1] [கதிர் 4

பெப்-மார்ச்-1985.

அன்பளிப்பு ரூபாய் 2

தொடர்புக்கு :

ஆசிரியர் குழு
'விடியல்'
35/3, வெல்கம் காலனி,
அண்ணா நகர் மேற்கு,
சென்னை-600 101.

## விடிவை நோக்கி...

ஈழம் வாழ் தமிழ்பேசும் மக்களது, ஸ்ரீலங்கா அரசின் ஒடுக்குமுறைக் கெதிரான தமிழ்ஈழ விடுதலைப்போராட்டம், சிக்கலான கால ஒட்டத்தினுள் பிரவேசித்துக் கொண்டிருக் கின்றது. அரச இராணுவத்திற்கெதிரான ஆயுதப்போராட்டம் மென்மேலும் செம்மைப் படுத்தப்படவேண்டியுள்ளது.

அன்றாடம் இறப்பைத் தழுவிவரும் எமது இனத்தினரின் விடிவு, விடுதலைப்போராளிகளின் கைகளிலேயே தங்கி யுள்ளது. எனவே இவ்வேளையில், விடுதலை இயக்கங் களிடையே நிலவும் முரண்பாடுகள் தனித்தன்மை பேணல் என்பன தமிழ்ஈழ விடுதலையில் அபிமானமுள்ளவர்களை நிமிர்ந்து பார்க்கவைத்ததில் வியப்பில்லை.

அனைத்துத் தரப்புகளிலிருந்தும், தமிழ்ஈழ விடுதலை இயக்கங்களை இணையுமாறு வற்புறுத்தும் வேண்டுகோள்கள் குவிய ஆரம்பித்தன.

இதேவேளை, இணைப்பின் அவசியத்தை ஏலவே உணர்ந்து 1984-ஏப்பிரலில் குறைந்தபட்ச செயல்திட்டங்களுக் காக இணைந்துகொண்ட தமிழ்ஈழவிடுதலை இயக்கம் (TELO), ஈழப்புரட்சி அமைப்பு (EROS), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) என்பன கூட்டாக ஏனைய இயக்கங் களையும் இணைப்பிற்குக் கோரிவந்தன. மேலும் இன்றைய வரலாற்றுக் கட்டத்தில் தமது கூட்டமைப்பை ஈழதேசிய விடுதலை முன்னணி (ENLF) என்ற பெயரில் மேலும் வலு வுள்ளதாக்கி, மற்ற இயக்கங்களை (ENLF)இன்கீழ் அணி வகுக்க வேண்டுகோள் விடுத்தன.

தற்போதைய வரலாற்றுக் கட்டாயத்தில், வேண்டுகோளை ஏற்று, தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் (LTTE) இயக்கத்தினர் ENLF ன் கீழ்அணிவகுக்க முன்வந்துள்ளனர். மேலும், தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத் (PLOT) தினரையும் இப்பொது அமைப்பின்கீழ் அணிவகுத்து எதிரியைக் கூட்டாக முறியடித்து, வெற்றி பெற ENLF முயன்று வருகின்றது.

மிக விரைவில், தமிழ் பேசும் மக்களது விடிவுக்காக அனைத்து இயக்கங்களினதும் இணைப்பில் ENLF வலுப் பெற விருக்கின்றது. வெற்றியின் நிச்சயம், தமிழ்பேசும் மக்கள் தரப்பில் தொனிக்கிறது.

மறுபுறத்தில், நமது எதிரித் தரப்பினர் தம்து இராணுவ பலத்தைப் பெருக்கி வருவதில் கண்ணாயிருப்பது உண்மை.

ஆனால், ஸ்ரீலங்கா இராணுவக் கூலிப்படை தமிழ்ஈழப் பகுதி அப்பாவி மக்களிடம் நடந்து கொண்ட மனிதாபிமான மற்ற நடத்தைகள், சர்வதேச பயங்கரவாதிகளின் கூட்டில் அழுக்கடையும்இலங்கையின் நிலைமைகள், வெளியுலகுகளை, இலங்கைத் தீவைச் சந்தேகக்கண் கொண்டு நோக்க வைத்துள்ளன.

வெளிநாடுகளில் தம்மைநியாயப்படுத்த இலங்கை அரசு எடுத்துவந்த முயற்சிகள் அனைத்தினதும் விளைவுகள் மீண்டும் இலங்கையையே வந்தடைந்தவண்ணமுள்ளன.

இதற்கு. சர்வதேச மட்டத்தில் தமிழ்ஈழ விடுதலைப் போராட்டத்திற்கான பிரசாரங்கள் முடுக்கி விடப்பட்டுள்ள மையும் காரணமாகும்.

இதனால் இலங்கையின் முக்கிய பொருளாதாரங்களுக் குரியதான உல்லாசப் பயணிகள் வருகை, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வருகை என்பன தடையாயுள்ளன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரசு வடக்கு, கிழக்கில் நடைமுறைப்படுத்தி வரும் அராஜகத்தினாலும், இராணுவச்செலவுக்கு அதிகமான பணத்தை விரயமாக்கி வருவதனாலும் இலங்கையின் பொருளாதார நிலைமை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், மாணவர் சக்தியின் மகத்துவத்தைப் பொருட்படுத்தாமல் மாணவர்களின் உயர்கல்வியில் தமது காட்டுமிராண்டித்தனமான சட்டங்களைப் புகுத்தியமை, அரசுக்கெதிரான மாணவர் கிளர்ச்சியையும் முடிவாக, பல்கலைக்கழகங்களின் மூடுவிழாவையும் அரசு சந்திப்பதில் முடிந்துள்ளது.

இலங்கை அரசுக்கு ஏற்பட்டுள்ள இந்த இக்கட்டான நிலையிலும் கூட, எதிர்க்கட்சிகள் தம்மை வளர்த்துக்கொள்ள -நிலைமைகளைத் தமக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்ள முனைந்து நிற்றல் J.R. அரசுக்குப் பெரும்பலவீனமே!

இதேவேளை, அண்மையில் வங்கி ஊழியர்களால் நடத்தி முடிக்கப்பட்ட வேலை நிறுத்தங்கள்கூட பலமான பின்னணிகளின் அடிப்படையிலேயே நடந்துள்ளன.

மற்றும், சிங்களத் தொழிலாளர்கள் மத்தியிலும், முற்போக்கு சக்திகள் மத்தியிலும், தமிழ் பேசும் மக்கள் மீதான அரச கொலைவெறியின் பிரதிபலிப்பு, 20 தொழிற்சங்கங்களை நமக்கு ஆதரவாக துண்டுப்பிரசுரங்கள் வெளியிடுவதற்குத் தூண்டியுள்ளது. வடக்கு, கிழக்கு மக்களது அனுதாப அலை தென்பகுதியில் பாயத் தொடங்கியிருப்பது, அரச பீடத்தவரை அச்சுறுத்துவது தெளிவு.

இந்த வேளைகளில், அரசின் ஸ்திரத்தன்மை மிகவும் தேவையாய் உள்ளது. ஆனால் ஸ்திரம் பேணும், அரச இராணுவமோ மிகவும் கேவலமான, உலகிலேயே மோசமான- தலைமைகளுக்குக் கட்டுப்படாத இராணுவமாக மாறிவந்துள்ளமை மென்மேலும் அரச தரப்பை அசைத்துக் கொண்டிருக்கின்றது.

இன்னும், தமது ஸ்திரத்தன்மையை நிலையாக்க அரசு பேச்சுவார்த்தை மாய்மாலங்களில் மீண்டும் அக்கறை காட்டுகின்றது.

கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக வட்டமேசை மாநாடு என்ற போர்வையில் 'தமிழ்த் தலைவர்கள், என்போருடன் பேசுவதாக இழுத்தடித்ததில் அரசு தமது இராணுவத் தயாரிப்பில் பன்மடங்கு உயர்ந்துள்ளது. இப்போது, மீண்டும் பேச்சுவார்த்தை... முன்பு 'தமிழ்த்தலைவர்கள்' பேய்க்காட்டப்பட்டனர்... இப்போது இயக்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தையாம்.

நமது தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் பேசித் தீர்த்து வைக்கவேண்டிய காலங்கள் மலையேறி விட்டன. அரச வன்முறைக்கு-ஒடுக்குமுறைக்கு எதிரான ஆயுதப் போராட்ட நடவடிக்கையே நமக்குத் தீர்வுகள் பெற்றுத்தரும். ஏனெனில், சர்வதேச பயங்கரவாதிகளின் கூட்டால் மரத்துப் போயிருக்கும் அரசு தரப்பினரின் காதுகள் ஒடிக்கப்பட வேண்டும். அதன் பின்புதான். பேசுவது காதில் ஏறும்!

இயக்கங்களின் இணைப்புக்கள் வரவர வலுவடைகின்றன.

அரசுக்கும், மக்களுக்குமான இடைவெளிகள் வர வர அதிகரிக்கின்றன.

இவ்வ தமிழ் பேசும் மக்களது விடிவின் நிச்சயத்துக்காகவே!—நிச்சயமாக!

# ஓராண்டு நினைவாஞ்சலி



காப்டன் பவான்

தமிழீழ விடுதலை இயக்கத்தின் சிரேஷ்ட போராளியான காப்டன் பவான். தனது பால்ய வயதிலேயே சுதந்திர உணர்வு கிளர்ந்து ரெலோவின் கொள்கைகளுடன் கைகோர்த்து செயல்பட்டு வந்தவர். அயராத உழைப்பும் தன்னந்தனியனான செயல் வீரனுமான எம்தோழன், பலதடவைகள் அரச கூலிகளின் தேடுதல் வேட்டையிலிருந்து தப்பி பாக்கு நீரிணையை சிறிய படகிலேயே கடந்திருக்கிறார். துணிச்சலான இச்செயல் வீரனை ஓராண்டின் முன் அலைகடல் அணைத்துக் கொண்டு விட்டது. அச்சுதந்திர தீபத்தை அணைத்துக் கொண்ட கடல், எமது சுதந்திர தாகத்தை அலையைப் போல் குமுறவைத்துள்ளது. இன்றும் ஓராண்டு நினைவாஞ்சலியை எமது உயர்த்திய துப்பாக்கியிலிருந்து வெளிக்கிளம்பும் ரவைப்பூக்கள் செலுத்திக் கொள்கின்றன.

★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ் பேசும் மக்கள்மீதான பேரினவாத ஒடுக்குமுறை

எஸ். மி. சங்கர்

முதலாளித்துவ உற்பத்தி முறையானது சமுதாய வளர்ச்சியின் ஒரு கட்டமே. வர்க்கங்களை அடிப்படையாகக் கொண்ட முன்னைய சமுதாய அமைப்புக்களின் உற்பத்தி முறையானது கால ஓட்டத்தில் எவ்வாறு நிராகரிக்கப்பட்டதோ அதேபோல் இவ் உற்பத்தி முறையும் சமுதாய வளர்ச்சியில் நிராகரிக்கப்படுவது வரலாற்று நியதியே இவ் உற்பத்தி முறையானது, மக்களின் தேவையை பூர்த்தி செய்வதற்காக அல்ல. முதலாளியின் லாபத்தைப் பெருக்குவதற்காகத்தான். மக்களின் உழைப்பை சுரண்டி லாபம் சேர்ப்பதை அடிப்படையாகக் கொண்ட இவ் மனிதவிரோத, ஒழுங்குபடுத்தப் படாத உற்பத்திமுறையால் பணவீக்கத்தையோ வேலையில்லாத் திண்டாட்டத்தையோ தீர்க்க முடிவதில்லை.

மனிதன் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கவல்ல சோசலிச் உற்பத்தி முறையை ஏற்படுத்துவதற்காக, சர்வதேசரீதியாக முதலாளித்துவ உற்பத்தி முறையைக் கட்டிக்காக்கும் முதலாளித்துவ அரசுகளுக்கு எதிராக பாட்டாளி வர்க்கம் போர் தொடுத்துள்ளது.

தொழிலாளர் வர்க்க இயக்கம் எவ்வளவு பலத்தோடு வளர்ச்சி அடைகிறதோ அவ்வளவு அதிகமான வேகத்தோடு, வெறியோடு முதலாளி வர்க்கம் அதை நசுக்குவதற்கு அல்லது உடைப்பதற்கு முயற்சி செய்கிறது.

முதலாளித்துவ சித்தாந்த அறிஞர்களினது அயராத ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகளின் வெளிப்பாடே தொழிலாளரை இனம், மதம், மொழி என்ற பேதங்களை ஏற்படுத்தி தேசிய வெறியை ஊட்டுவதன்மூலம் தொழிலாள வர்க்கத்தை பிளவுபடுத்தி சுரண்டலை நிரந்தரம் ஆக்கலாம் என்பதும், சேறும் சகதியும் நிறைந்த அழுகிய கலாச்சாரத்தை பரப்புவதன் மூலம் தொழிலாளரை போர்குணம் அற்றவர்கள் ஆக்கலாம் என்பதும் ஆகும்.

இலங்கையில் இச்சித்தாந்தப் பிரயோகத்தின் விளைவே இன்று தமிழ்பேசும் இனத்தைத் தேசிய விடுதலைப் போராட்டத்திற்காக போர்க் கோலம் பூணவைத்துள்ளது.

பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு ஏற்பட்ட நெருக்கடி நிலையில் அது இலங்கையில் இருந்து வெளியேறும் போது தொடர்ந்து சுரண்டுவதற்கு வசதியாக நிலப்பிரபுக்களிடம் ஆளும் அதிகாரத்தை ஒப்படைத்தபோதும், இலங்கையில் முதலாளித்துவத்திற்கு பெரும் நெருக்கடி நிலைமைகள் ஏற்பட்டதை சுதந்திரத்துக்கு அடுத்த சில மாதங்களில் நடந்த பெரும் வேலை நிறுத்தங்கள் எடுத்துக் காட்டின.

ஆனால் அவ்வேலை நிறுத்தங்கள் சம்பள உயர்வு என்ற கோஷத்துடன் நின்றதே ஒழிய அதிகாரத்தைக் கைப்பற்றுமளவுக்கு வளர்ச்சியடையவில்லை. தொழிலாளர் சரியான ஸ்தாபனமயப்படாமையும், இடதுசாரி கட்சிகள் சந்தர்ப்பவாதக் கட்சிகளாக இருந்தமையும் இவ் வேலை நிறுத்தங்கள் தோல்வியில் முடிந்தமைக்கு முக்கிய காரணங்களாக இருந்தன.

இலங்கையில் 1948ஆம் ஆண்டு நாடு முழுவதும் நடந்த பொது வேலை நிறுத்தங்கள் முதலாளித்துவ அதிகாரத்தையே ஓர் உலுப்பு உலுக்கியது. இவ் வேலை நிறுத்தங்களில் தொழிலாளரின், வர்க்க ஒற்றுமையைக் கண்ட அதிகார வர்க்கம் தொழிலாள வர்க்க இயக்கத்தை உடைப்பதற்கான தமது சித்தாந்தத்தை பிரயோகிக்க முற்பட்டனர்.

விளைவு, ஒன்றரை நூற்றாண்டிற்கு மேல் தமது வியர்வையால் தேயிலைச் செடிகளுக்கு உரம் ஊட்டிய உண்மையான புரட்சிகரசக்திகளான மலையக தொழிலாளிகளின் பிரஜா உரிமையை பறித்ததன் மூலம் மலையக தொழிலாளரை ஏனைய தொழிலாளரில் இருந்து அன்னியப் படுத்தியதுடன், இவர்களுக்கு இந்திய வம்சாவளித்தமிழர் என்ற நாமம் சூட்டப்பட்டு நாடற்றவர்கள் ஆக்கப்பட்டனர்.

1947ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில், 7 இடதுசாரிப் பிரதிநிதிகள் மலையக தொழிலாளரில் இருந்து தெரிவு செய்யப்பட்டமையைக் கண்ட தரகு முதலாளித்துவ அதிகார வர்க்கம் 1949ம் ஆண்டு இவர்களின் வாக்குரிமையையும் பறித்துக் கொண்டது.

ஸ்தாபனமயப்படுத்தப்பட்ட மலையகத் தொழிலாளர் ஏனைய பிரதேசங்களில் உள்ள தொழிலாளிகளில் இருந்து இந்திய வம்சாவளியினர் என்ற பெயரால் பிரிக்கப்பட்டபோதும், 1932இல் நடந்த போதுவேலை நிறுத்தத்தின் போது மலையகத் தொழிலாளரும் பங்கு பற்றியதன் மூலம், தொழிலாளரின் வர்க்க ஒற்றுமையை எடுத்துக்காட்டினர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முதலாளித்துவ அரசு தான் தப்பிப் பிழைக்க வேண்டுமென்பதற்காக, தான்சார்ந்துள்ளவர்க்க நலனை பேண வெண்டுமென்பதற்காக, இனம், மதம் மொழிரீதியிலான ஒடுக்கு முறைகளை அதே நாட்டின் ஏனைய சிறுபான்மை தேசிய இனங்கள்மேல் கட்டவிழ்த்து விடுகின்றது. ஆனால் அனைத்துதொழிலாளரின் போராட்டங்களையும், இனபேதமற்று ஒரே பிடியில் அமுக்கி, தான் பிணைத்துக்கொள்ள முற்படுகின்றது.

அடுத்தடுத்து நடந்த பொது வேலை நிறுத்தத்தால் நிலைதடுமாறிய முதலாளித்துவம் வேறுவழியின்றி சிறுபான்மை தேசிய இனமான தமிழ்சமூகத்தின்மேல் ஒடுக்கு முறைகளைப்படிப் படியாக மேற்கொண்டது. தமிழ் சமூகத்தின் நிலங்கள் பறிக்கப்பட்டதில் இருந்து கல்வி; வேலைவாய்ப்பு போன்றவற்றிலும் ஒடுக்கு முறைகள் விரிவடைந்தன. இதன் விளைவாக பல ஆண்டுகள் ஒற்றுமையாக இருந்த தமிழ் சிங்கள சமூகங்களுக்கிடையில் 1953இல் முதலாவது இனக்கலவரம் ஏற்பட்டது. இரு சமூகங்களில் இருந்துப் பலர் கொல்லப்பட்டனர்.

தொடர்ச்சியான திட்டமிட்ட ஒடுக்கு முறைகளை எதிர்த்து தமிழ் சமூகத்தில் இருந்த முதலாளித்துவ வர்க்கம் பல போராட்டங்களை மேற்கொண்டது. இப் போராட்டங்கள் வெறும் சத்தியாக்கிரகப் போராட்டமாகவும் உண்ணா விரதப் போராட்டமாகவும் இருந்ததே ஒழிய வெகுஜனப் போராட்டமாக அமையவில்லை.

ஆளும் வர்க்கத்தால் ஸ்தாபன ரீதியாக இனவாதம் வளர்க்கப்பட்டமையால், பெரும் பான்மை தேசிய இனத்தைச் சேர்ந்த சிங்கள தொழிலாளருக்கும் சிறுபான்மை தேசிய இனத்தைச் சேர்ந்த தமிழ் தொழிலாளருக்கும் இடையே நம்பிக்கை உணர்ச்சியோ வர்க்க ஒருமைப்பாடோ இருக்கவில்லை இருந்த போதும் 1962, 1966இல் நடந்த பொதுவேலை நிறுத்தங்களில் மலையகத் தொழிலாளரும் பங்கு பற்றியது குறிப்பிடத்தக்கது. ஆனால் 1972இல் மலையகத் தொழிலாளர் மேற் கொண்ட வேலை நிறுத்தத்தின் போது ஏனைய தொழிலாளர்கள் இதில் பங்கு கொள்ளாமை இனவாதத்தின் வளர்ச்சியையே காட்டுகிறது. வடக்கு கிழக்கு தொழிலாளரும் இதில் பங்கு பெறவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

இனவாதத்தால் தொடர்ந்தும் முதலாளித்துவத்தைக் கட்டிக் காப்பாற்ற முடியாமல் 1976 இல் மீண்டும் மிகப்பெரிய வேலை நிறுத்தத்தை மலையகத் தொழிலாளர் உட்பட அனைத்து தொழிலாளரும் மேற்கொண்டனர். ஆனால் சரியான ஸ்தாபனம் இல்லாமல் சந்தர்ப்பவாத இடதுசாரிக் கட்சிகள் அனைத்தும் தோல்வியையே தழுவிக்கொண்டன.

தொழிலாளர் வர்க்க இயக்கம் மீண்டும் வளருவதைக் கண்ட முதலாளிவர்க்ககம் 1977 இல தமிழ், சிங்கள மக்களுக்கிடையில் இனக்கலவரத்தை ஏற்படுத்திபதின் மூலம் தன்னைக் காப்பாற்றிக் கொண்டது.

குறிப்பிட்ட அரசின் எல்லைக்குள் பலவந்தமாக தேசிய இனத்தை வைத்துக் கொண்டிருப்பதை எதிர்த்து பாட்டாளி வர்க்கம் போராட வேண்டியிருந்தது. சுயநிர்ணய உரிமைக்காகப் போராட வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஆனால் 1977 இல் நடந்த இனக்கலவரத்தின்பின் தமிழ் சமூகத்தில் இருந்த முதலாளித்துவ தலைமைகள் தமிழ் ஈழம் என்ற கோஷத்தை முன் வைத்ததன் மூலம் 1977 இல் நடந்த பொதுத்தேர்தலில் வெற்றி பெற்றனர். ஆனால் இங்கு அளிக்கப்பட்ட வாக்குகள் தமிழ் ஈழத்துக்கு அளிக்கப்பட்ட வாக்குகளே!

இத்தலைவர்கள் வெகுஜன ஆயுதப் போராட்டத்திற்கு தயாராகாமல் இவர்களின் வர்க்க குணாம்சத்திற்கேற்ப சிங்கள முதலாளித்துவ அதிகார வர்க்கத்துடன் பேச்சுவார்த்தை மூலம் சமரசம் செய்து கொள்வதே இவர்களின் கொள்கையாக இருந்து வருகிறது. (தொடரும்)

# அஞ்சலி



தோழர் செர்னன்கோவ்

அகில உலக மக்களையும் அணுவாயுத அச்சுறுத்தலுக்குட்படுத்தி வரும் அமெரிக்க ஏகாதிபத்திய அரசுடன் அணுவாயுதக் குறைப்பு முயற்சியில் தொடர்ந்து பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு வந்த—உலக சமாதானப் பிரியர் தோழர் செர்னன்கோவ்'வின் மறைவுக்கு, சர்வ தேச பயங்கரவாதிகளின் கொலைப் பயமுறுத்தலிலிருந்து மீளத் துடிக்கும் தமிழ்ஈழ மக்கள் தமது அஞ்சலியைச் செலுத்துகின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தொடரும் கடல் அராஜகம்

அண்மைக்காலமாக வங்காள விரிகுடாக் கடல் பிராந்தியம் செங்குருதியில் நனைந்து கொண்டிருக்கின்றது. இலங்கை அரசபீடத்தவரின் ஈழம்வாழ் தமிழ்பேசும் மக்களுக்கெதிரான அராஜகங்களின் காரணமாக இலங்கையில் ஏற்பட்ட நெருக்கடி நிலைமை கடந்த சில மாதங்களுக்குள் கூர்மைப்பட்டுள்ளமை தெரிந்ததே!

தமிழ்பேசும் இனத்தினையே அழித்தொழித்துவிடும் நோக்குடன் சர்வதேச பயங்கரவாதிகளின் கூட்டுடன் களமிறங்கியுள்ள கொலைவெறி அரசின் கூலிப்படையினர் பாக்குநீரிணைக் கடற்பிராந்தியத்தில் ரோந்துப்பணிகளை மேற்கொள்ளத் தொடங்கியதிலிருந்து, அமைதி பிராந்தியமான வங்கக்கடல், செங்குருதியுடன் கொந்தளித்துக் கொண்டிருக்கின்றது.

வங்காள விரிகுடாக் கடற்பரப்பினூடாக, விடுதலைப்போராளிகளது நடமாட்டங்களைக் கண்காணிக்கும் நோக்கில், இனவெறி அரசால் ஏற்படுத்தப்பட்ட ரோந்து நடவடிக்கைகளுக்கு- சர்வதேசப்பயங்கரவாதிகளிடமிருந்து பீரங்கிப் படகுகள் (Gun boat) கிடைத்தன.

ரோந்துப்பணி துவங்கியதிலிருந்து, இலங்கைக் கடற்படையினர் கண்ணிற்பட்ட படகுகளையெல்லாம் குறிவைக்கத் தொடங்கினர். சிறுசிறுபடகுகள் பீரங்கி கொண்டு தகர்க்கப்பட்டன. சிதைந்த படகுகள் அமிழ்ந்துபோக கடலலையுடன் செந்நிறம் சேர்ந்துகொண்டது.

பீரங்கிக்குண்டுகள் ஆரம்பத்தில் இலங்கைத் தமிழ் மீனவர்களைத் துளைத்துக் கொண்டிருந்தன. பின்பு, தமிழகமீனவர்களையும் சுவைக்கத் தொடங்கின. அப்பாவிமீனவர்கள் அராஜகத்துக்கு இரையானார்கள்! வெறிக்கும்பல்கள் வெற்றிக்களிப்புடன் கூச்சலிட்டன. அரசஊது குழல்கள் பயங்கரவாதிகளைக் (அரசஇனவெறிப் பார்வையில் ஈழவிடுதலைப் போராளிகள் = பயங்கரவாதிகள்) கொன்றுவிட்டதாக எக்காளமிட்டன.

அரசகூலிகளின் வெறித்தனங்களால், தமது சொந்த நாட்டையே விட்டு அகதிகளாக ஓடும் நிலையில்—பயங்கரமான கடற்படை ரோந்துமத்தியிலும், இழப்பதற்கு உயிர்மட்டுமே உள்ளதென்ற நிலையில்—கடல்கடந்து தமிழகத்துக்கு விரையும் தமிழ் மக்களைக்கூட நரபலி தேடி கடலில் அலைந்து கொண்டிருக்கும் கூலிகள், இவர்களது உயிரையும் பறித்துக் கொண்டனர்.

தொடர்ந்தும் இதே நிலைமைகளே நீடிக்கின்றன. அண்டைநாடுகளின் கண்டனங்களோ, எச்சரிக்கைகளோ எதுவும், தொடரும் கடல் அராஜகத்தில் நல்ல முடிவுகளைக் கொண்டு வந்ததாகத் தெரியவில்லை. ●

'தார்மீக'ப் படையின் அட்டூழியத்தின் விளைவு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "அந்தியில் ஓர் உதயம்"

தோழர் தில்லை

அந்திப் பொழுதின்
அந்திம வேளையில்
என்னவளே!
ஏக்கத்தோடு உன்னை
எதிர் பார்க்கிறேன்!

★

தூரத்தில் ஓர் புள்ளி!
ஓ! அன்பே
நீ ஓடோடி வருகின்றாய்
காற்றில் வியா பித்திருக்கும்
துப்பாக்கி வேட்டுக்களின்
முழக்கத்தி னூடே - நீ
முன்னேறி வருகின்றாய்.
வானைக் கிழிக்கும்
மரண ஓலங்களினூடே - நீ
மௌனித்து வருகின்றாய்.

★

வெடித்துச் சிதறும்
வெடி குண்டுகளிலிருந்து
வெளிக் கிளம்பும்
கரும் புகையினூடே
புரட்சிக்காய் சிவந்துவிட்ட
சூரியனாய் - நீ
எனை நெருங்கி வந்துவிட்டாய்.

★

எதிரிகளின் துப்பாக்கி கக்கிய
ரவைகளினால்
எச்சிலாக்கப்பட்டு
உருமாறிக் கிடக்கும்
என்னுடலின்
கடைசி உயிரோட்டம்
உன்னிடம் பேசும்
கடைசி வரிகள் இவை.

★

"இரத்தக் கரங்களில்
இன்னமும் நான்
அணைத்து வைத்திருக்கும்
துப்பாக்கியை - உன்
கரங்களில் ஏந்து!
இறந்தகால நினைவுகளை
அனுபவங் களாக்கி
ஈழ விடிவுக்காக
இறுதிவரை போராடு!!

★

கண்ணீர் வற்றிக்
கனன்று கொண்டிருக்கும் உன்
விழிகளைப் பார்க்கிறேன்.
நெருங்கி வரும் சூரியப்பந்தை
தாங்கஉன் கரங்கள் உயர்கின்றன.

★

பனி போர்த்திய
மலைச் சாரல் களிடையே
செம்மலராய்
பூத்து வரும்
இளம் கதிரவனைத் தொடுவதற்கு
குளிர் காற்றைக் கிழித்துக்கொண்டு
துப்பாக்கி உயர்த்தி
நீ ஓடுகின்ற காட்சி
என் வெளிர் விழிகளுக்குத் தெரிகிறது.
ஓ!
என் விழிகளோ
இமைகளுக்குள் மறைகிறதே.

★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பிரிட்டனின் இரட்டை வேடம்

அகில உலக ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகளிடையே நிலவும் போட்டாபோட்டிகளின் காரணமாகவும், மற்றும் அந்நாடுகளின் பொருளாதார அமைப்பு காரணமாகவும் இன்று உலக நாடுகளைப் பிடித்துள்ள கடன் பளுவிலிருந்து எந்தவொரு நாடும் தப்பிக்கொள்ளவில்லை.

அமெரிக்க, பிரிட்டன், பிரான்ஸ் ஏகாதிபத்தியங்கள் கூட இதற்கு விதிவிலக்கல்ல!

பிரிட்டன், இப்போது ஐரோப்பிய பொதுச் சந்தை நாடுகளால் ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளது. அத்தோடு அங்கே வேலையில்லாத திண்டாட்டங்களும், தொழிலாளர்களின் வேலைநிறுத்தப் போராட்டங்களும், கிளர்ச்சிகளும் மலிந்துள்ளன. பிரிட்டன் தனது பலமான மொருளாதார நெருக்கடிக்குள்ளும், தம்மைச் சமாளித்துக் கொள்வதற்காக வேற்றுநாடுகளுக்கு ஆயுதங்கள் விற்பனை செய்தே பிழைத்துக் கொள்கின்றது.

அண்மைக்காலமாக அமெரிக்கா, சீனா, பிரிட்டன், தென்கொரியா, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளுக்கு ஆயுதப்பிச்சை கேட்டு ஓடித்திரிந்த இலங்கை அரசாங்க மந்திரிமார் ஏகாதிபத்தியங்களின் உதவியுடன் ஆயுதக்குவிப்பை மேற்கொண்டு வந்தனர்.

எனினும், இலங்கையில் அரசகூலிகளினால் மேற்கொள்ளப்பட்டுவரும் இனப்படுகொலைகளை இந்நாடுகளால் நன்கு உணரமுடிந்தும் கூட, தமது நாடுகளின் பொருளாதாரக்காரணங்களுக்காக அவை ஆயுதங்களை வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ இலங்கைக்கு விற்பனை செய்கின்றனவென்பது மறுக்கமுடியாது.

இவ்விவகாரத்தில் பிரிட்டனின் நிலைமை தர்மசங்கடமானதொன்று!

பிரிட்டனிடமிருந்து ஆயுதம் வாங்கும் நாடுகளில் மிகவும் கணிசமான அளவு ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும்நாடு இந்தியாவே!

ஆனால், சர்வதேச பயங்கரவாதிகள் குடிகொண்டிருக்கும் இலங்கைத் தீவில், இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளுக்கு—குறிப்பாக இந்தியாவுக்கு அச்சுறுத்தலை உண்டாக்கும் ஏற்பாடுகளுக்கு மத்தியில் பெருமளவு நவீன இராணுவத் தளவாடங்கள் குவிந்து கொண்டேயிருக்கின்றன. உள்நாட்டுக் கலவரத்தைச் சாட்டாகவைத்து இவ்வாறான பயங்கரவாதமுயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலைமையில் பிரிட்டன் தமது வருமானத்தை நோக்குகின்ற அதே வேளையில் வாடிக்கையாளரையும் விடவில்லை. எனவே இந்தியாவைப் பகைத்துக்கொண்டு சிறந்த சந்தை வாய்ப்பை இழக்கக்கூடாது என்ற நிலைமையில் வெளிப்படையாக இலங்கைக்கான இராணுவ உதவிகளை மறுத்தது.

மேலும், ஸ்ரீலங்கா அரசு, தமிழர் பிரச்சினையை பேச்சு வார்த்தை மூலம் தாங்களாகவே தீர்த்துக் கொள்ளவேண்டுமெனவும், மனித உரிமைகளை ஸ்ரீலங்கா அரசு மதித்து நடக்க வேண்டுமெனவும் கூறியது. இந்தியாவின் மத்தியஸ்தத்தால் இனப்பிரச்சினை தீர்த்துவைக்கப்பட முடியுமென இலங்கை கருதினால், இலங்கைத் தலைவர்கள். இந்தியாவிடம் நேரடியாகக் கோரிக்கை விடவேண்டுமெனவும், பிரிட்டன் கூறியது. அத்தோடு, இலங்கைக்கு ஆயுத உதவிக்கான நிதியுதவியோ, ஆயுத உதவிகளோ வழங்க முடியாதெனத் தெளிவுபடுத்தியது.

இது பிரிட்டிஷின் பசப்பு வார்த்தையென்பதும், இந்தியாவுக்காகவே இந்தத் திருவிளையாடல் என்பதையும், இலங்கைக்குப் பிரிட்டிஷ் வழங்குகின்ற மறைமுக உதவிகளை காட்டுகின்றன. ஆம்! பிரிட்டிஷ் இலங்கையரசுக்கு மறைமுக இராணுவ உதவி செய்கின்றது.

தமது இரட்டை வேடத்தைக் கச்சிதமாகச் செய்திருக்கின்றது பிரிட்டிஷ் அரசு!

முதலாளித்துவம் முதலாளித்துவம் தான்! அதனிடமிருந்து பெருந்தன்மையான-நல்ல குணங்களை எதிர்பார்க்கவே இயலாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "ஏகாதிபத்திய எதிர்ப்பு அலை வலுவடைகிறது"

ஏகாதிபத்திய, முதலாளித்துவ அமைப்பு முறையானது அதன் உள் முரன்பாடுகளால் இயங்கமறுத்து நிற்கிறது. இவ் உள் முரண் பாடுகளை முதலாளித்துவ விற்பனர்களால் தீர்க்க முடியாதது மட்டுமல்ல. தற்காலிக மாவது தடுத்து நிறுத்த முடியாத நிலையில் ஏகாதிபத்திய, முதலாளித்துவமானது ஒரு மூன்றாம் உலக தயாரிப்பிற்கான முயற்சிகளில் முழுமூச்சுடன் ஈடுபட்டு வருகிறது. இவர்களின் இந்த உலக மகாயுத்த தயாரிப்புகளுக்கு, ஏகாதிபத்திய ஆமாம் சாமிகள் ஓடிஓடி உழைத்துக் கொண்டிருக்கிறர்கள்.

இவர்களின் இம் 3ம் உலக மகாயுத்த தடாரிப்புகளுக்கு உலக ஒடுக்கப்பட்ட மக்களின் தீஎதிர்ப்புகள் பூகோளத்தின் மேற்பரப்பெங்கும் வெடித்துள்ளது.

லண்டன் அருகே மோல்ஸ்வர்த் என்ற இடத்தில் அமெரிக்காவில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட நீண்ட தூர ஏவுகணைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. 1988-ம் ஆண்டிற்குள் 64 இவ்வகை ஏவுகணைகளை அமெரிக்காவில் இருந்து பெற்று நிறுத்த திட்ட மிடப்பட்டது. இவர்களின் இத்திட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து மோல்ஸ்வர்த் பகுதியில் ஆயிரக்கணக்கான மக்கள் கடந்த பிப்ரவரி மாத முதல் வாரத்தில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அமெரிக்காவின் மேற்குப் பகுதியில் பசிபிக் கடல் கரையில் உள்ள கலிபோர்னியா மாநிலத் தில் உள்ள வாண்டன்பர்க் படை தளத்தி லிருந்து ஏவுகணை மூலம் பறக்கும் அணு குண்டுகளை 8680, மைல் தூரத்தில் உள்ள ஆஸ்றேலியா கடலில் விழச்செய்து சோதனை நடாத்த அமெரிக்கா திட்டமிட்டிருந்தது. இதை அனுமதிக்க வேண்டாம் என ஆஸ்திரேலியா மக்கள் கடந்த பிப்ரவரி மாத நடுப்பகுதியில் பொங்கி எழுந்ததை அடுத்து, அமெரிக்காவின் இச்செயலை அனுமதிக்க முடியாதென ஆஸ்திரேலியா பிரதமர் ஹாக் அறிவித்து விட்டார்.

இந்த அணுகுண்டு சோதனைக்காக அமெரிக்க அணுகுண்டு யுத்தக்கப்பல்கள் ஆஸ்திரேலியா - நியூசிலாந்து கடற்பகுதிற்கு வந்தால் நியூசிலாந்து துறைமுகத்தில் அதை அனுமதிக்க வேண்டாம் என நியூசிலாந்து மக்கள் கிளர்ந்தெழுந்துள்ளதை அடுத்து, நியூசிலாந்து பிரதமர் லாங்கே அமெரிக்க அணு குண்டு கப்பலை அனுமதிக்க முடியாதென அறிவித்துவிட்டார்.

இதையடுத்து, பெல்ஜியம்-ஹாலந்து ஆகிய நாட்டு மக்கள் அமெரிக்க அணுகுண்டுகளை குவித்து வைக்கவேண்டும் என்ற திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து, அந்த இரண்டு நாடுகளும் குறிப்பிட்ட காலவரைக்குள் அமெரிக்க அணுகுண்டுகளை குவித்து வைக்க வேண்டும் என்ற திட்டத்திற்கு கட்டுப்பட முடி யாது என்று அறிவித்துவிட்டன.

கண்டம் விட்டு கண்டம் பாயும் அமெரிக்காவின் 48 நவீன அணு ஏவுகணை களை பெல்ஜியத்தில் தயார் நிலையில் வைக்க எடுத்த முடிவை எதிர்தது கடந்த வாரத்தில் பெல்ஜியம் மக்கள் மாபெரும் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதேபோன்று நெதர்லாந்திலும் அமெரிக்க அணு ஆயுத குவிப்பை எதிர்த்து 15,000 நெதர்லாந்து மக்கள் கடந்த வாரம் ஆர்ப் பாட்டம் செய்தனர்.

இப்படியாக, ஏகாதிபத்தியத்திற்கு எதிரான அலை சர்வதேசரீதியில் வலுப்பெற்று வளருகிறது. ஏகாதிபத்தியவாதிகளின் 3ஆம் உலகப்போருக்கான தயாரிப்புகள் யாவும் விரைவில் பூகோளமெங்கும் மக்களால் முறி யடிக்கப்படப் போகிறதென்பதை வரலாறு காட்டத்தான் போகிறது.

[17-ம் பக்கம் பார்க்க]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அமெரிக்கக் குரல்

ஓர் உளவு நாடகம்

VOICE OF AMERICA.

இலங்கையில் Voice of America Radio Station (VOA) அமைக்கப்படப் போகின்றது. என்று அண்மைக் காலமாக வெளிவந்து கொண்டிருந்த செய்தியினுள் மூடிமறைக்கப்பட்டிருந்த அமெரிக்கச் சதிக்கும்பலின் இராணுவ நடவடிக்கையொன்று இப்போது அம்பலத்திற்கு வந்துள்ளது.

அமெரிக்காவின் இத்தகைய குள்ளத்தனத்தையும் இலங்கையரசின் முட்டாள் தனத்தையும் வெளிசத்துக்கு இழுத்துவந்து, வெளியுலகுக்குக் காட்டியுள்ளது இலங்கையரசின் எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு ஆதரவான 'போரம்' எனும் ஏடு!


அமெரிக்காவுக்கு வெளியேயுள்ள VOA நிலையங்களில் மிகவும் சத்திவாய்ந்த இந்தநிலையமானது இலங்கையின் மேற்குக் கடற்கரை நகரமான சிலாபத்தில் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இது இப்பிரதேசத்தில் ஒலிபரப்பாகும் அனைத்துக்கம்பியிலி [Wire Less] ஒலிபரப்புகளையும் செயற்கைக் கோள் இணைப்பின்மூலம் அமெரிக்க இராணுவத் தலைமையகமான 'பென்ரகன்'க்கு அனுப்பிவைக்கும்.

இதுபோன்ற இதன் செயற்பாடுகளையும்' இந்த ஒலிபரப்பு நிலையத்தால் ஏற்படக்கூடிய சர்வதேச அரசியல் விளைவுகளையும் 'போரம்' ஏடு விரிவாக ஆராய்ந்துள்ளது.

அமெரிக்காவின் இத்தகைய நடவடிக்கையானது இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளுக்கும், குறிப்பாக இந்தியாவுக்கும் பாரதூரமான அச்சுறுத்தல்களை ஏற்படுத்தும்வாய்ப்புக்கள் உள்ளன.

இந்நாடுகளில் எடுக்கப்படும் இராணுவ நடவடிக்கைகள் அனைத்தும் உளவு பார்க்கப் படுவதற்கு அமெரிக்காவின் இத்திட்டம் மிகவும் பயன்படும். இதன்மூலம் இந்தியா உட்பட்ட இந்துசமுத்திரப் பிராந்திய நாடுகள் அனைத்தும் தமது இராணுவ இரகசியங்களைக் கட்டிக் காப்பதில் எவ்வித பிரயோசனமும் இல்லாமற் போகும்.

இதனால், இந்துசமுத்திரப் பிராந்திய நாடுகள் அனைத்தும் தமது முக்கிய இரகசியங்கள் அனைத்தையும் அமெரிக்கச் சதிகாரர்களான CIA இடம் இழந்து, அதன் வலைக்குள் விழுந்து தமது இறைமைகளை இழந்துவிடப் போகும் அச்சங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.



இலங்கை அரசு படையின் அராஜகம்

எனவே, அமெரிக்காவின் இந்த உளவுச் சதிமுயற்சிக்கும், இம்முயற்சிக்குப் பக்கபலமாக இருந்த ஸ்ரீலங்கா முரட்டு அரசுக்கும் இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளால் செய்யக்கூடிய கைமாறு என்ன? இந்நாடுகள் தங்கள் இறைமைகளைக் காக்கச் செய்ய வேண்டியதென்ன?

ஏகாதிபத்தியத்தின் இந்தச்செயலை வன்மையாகக் கண்டிக்கவேண்டும். மூன்றாம் உலக நாடுகளின் நலம் பேணும் சகல அமைப்புக்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மூலமாகவும் இந்தச்சதியை எதிர்த்து அனைத்து நாடுகளும் பலமான கண்டனங்களை விட வேண்டும். ஏகாதிபத்தியத்தின் கொட்டத்தை அடக்க அணி திரளவேண்டும்.

சர்வதேச பயங்கரவாதிகளைத் தமது நாட்டில் உபசரித்து, அவர்களது சதிவேலைகளுக்கும் இடங்கொடுத்து' அவர்களிடமிருந்து இராணுவ உதவிகள் பெற்றுவரும் கொலைவெறி அரசின் இதுபோன்ற நடவடிக்கைகளால் ஏகாதிபத்தியத்தை. வீழ்த்தி, உலகமக்களை மரண அச்சுறுத்தலில் இருந்து மீட்கும் புனித பணியில்முற்போக்குடன் செயல்பட்டுக் கொண்டு வரும் அனைத்து நாடுகளையும் காட்டிக் கொடுக்கும் நடவடிக்கைகளாலும், அந்நாடுகளுக்குத் துரோகமிழைக்கும் நடவடிக்கைகளாலும், சர்வதேச ஒடுக்கப்பட்ட மக்கள்முன்பு கூண்டுக் கைதியாக இப்போது இலங்கை நிற்கப்போகின்றது.

இதே வேளை, இதுவரை இலங்கையின் நேசசக்திகளாக இருந்துவந்த அண்டைநாடுகளும், இந்துசமுத்திரப் பிராந்திய நாடுகளும் தமது ஒட்டுமொத்தமான வெறுப்பை இலங்கை மீது செலுத்தியாகவேண்டிய கட்டாயமேற்பட வழியுண்டு.

வர்த்தக மற்றும் இதர உதவிகளைநிறுத்திக் கொள்ளல், கூட்டுச் சேரா நாடுகளிலிருந்து இலங்கையை விலக்கிவைத்தல், தூதரக உறவுகளை வாபஸ் பெறுதல், நிதியுதவிகளை மறுத்தல் போன்ற இலங்கைக்கு மிகவும் முக்கியமாகத் தேவைப்படும் சர்வதேச இணைப்புக்களைத் துண்டித்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை,

இலங்கையரசு, தாமாகவே வலிந்து வளர்த்துக்கொண்ட இனப்பிரச்சினை இப்போது மலையளவு வளர்ந்துள்ளது. இதனைச் சாட்டாக வைத்து, இலங்கைக்கு உதவுவதாகக் கூறிக் கொண்டு இலங்கையில் காலடி எடுத்துவைத்த சர்வதேச மோசடிக் கும்பலினால் இலங்கை தமது நல்ல பெயரை இழந்து வெளிநாடுகளில் நாற்றமெடுக்கின்றது.

அண்டை நாடுகளைப் பகைத்துக் கொண்டும், அவற்றின் உதவிகளினின்றும் அந்நியமாகி, தனிக்கட்டையாய் இருக்கவேண்டிய நிலையை இலங்கை எய்தியுள்ளது.

இதனால் இலங்கையின் பொருளாதாரம் கல்வி, பாதுகாப்பு போன்றவை மிகவும் மோசமான முறையில் பாதிக்கப்படவுள்ளன.

இவ்வளவையும் அனுபவிக்கப் போகின்றவர்கள் யார்? அரசபீடத்தவரா? அப்பாவி இலங்கை மக்களா?
சிங்களமக்களே!

நம்மெல்லோரையும் உலக விழுங்கியிடம் அடகுவைத்துக் கொண்டிருக்கும் கொலைவெறி இனவாத அரசுக்கெதிராகக் கிளர்ந்தெழுவோம்!

நமது பொது எதிரியான தரகுமுதலாளித்துவ அரசபீடத்தின் அராஜகத்தை முறியடிப்போம்!

சர்வதேச பயங்கரவாதிகளை நமது நாட்டிலிருந்து விரட்டியடிப்போம்!

நமது நாட்டின் இறைமையை முதலாளித்துவ, ஏகாதிபத்தியப் பிடிகளிலிருந்து மீட்போம்!

★

“வடக்கு, கிழக்கில் நெருக்கடி நிலை தோன்றியிருந்தும்கூட தேசிய பொருளாதாரம் தொடர்ந்து வளர்ந்தால் மாத்திரமே வேலையில்லாப் பிரச்சினையைத் தவிர்த்தல் நாட்டு மக்கள் வாழ்வை சுபீட்சமடையவைத்தல் என்பன சாத்தியமாகும்”

—நிதியமைச்சர்.

(இலங்கை வானொலிச் செய்தி 17-03-'85).

வடக்கு, கிழக்கின் அதாவது தமிழ் ஈழத்தின் வாயிலாக இலங்கையரசு பெறும் தேசிய பொருளாதாரத்தின் மகிமை, நிதியமைச்சரின் கூற்றிலிருந்து இன்னும் குறைந்து விடவில்லையென்பது தெளிவு. அது குறைந்துவிடப் போவதுமில்லையென்பது உறுதி!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி பெப்ரவரி-1917

## அக்டோபர் புரட்சிக்கான அறைகூவல்.

கடந்த காலங்களில் தொழிலாளர்கள் பல அதிகாரவர்க்கத்திற்கு எதிரான போராட்டங்களில் வெற்றியை குவித்திருக்கிறார்கள். இதில் ரஷிய பெப்ரவரி புரட்சியானது மகத்தானது. இது ஓர் முதலாளித்துவ ஜனநாயக புரட்சியாக இருந்தபோதும் மாாக்ஸீய தத்துவத்தால் ஆயுத பாணியாக்கப்பட்ட தொழிலாளர் வர்க்கம் தலைமை தாங்கி இட்புரட்சியை நடத்தியமையால் முதலாளித்துவத்தால் அதிகாரத்தை நிலை நிறுத்திக் கொள்ள முடியவில்லை. விளைவு ஒக்டோபர் புரட்சியுடன் முதலாளித்துவத்திற்கு ரஷ்யாவில் முடிவு கட்டப்பட்டது.

முதலாளித்துவ அரசாங்கத்துடன் கூடவே அதற்குப் பக்கத்தில் வேறொரு அரசியல் அதிகாரமும் இருந்தது. அதுதான் தொழிலாளர்கள் பிரதிநிதிகளையும்-இராணுவ வீரர்களின் பிரதிநிதிகளையும் கொண்ட சோவியத்துக்கள் கையிலிருந்த அரசியல் அதிகாரம். இராணுவ வீரர்களின் பிரதிநிதிகளில் பெரும்பாலானோர் யுத்தத்திற்காக சேர்க்கப்பட்ட விவசாயிகள். எனவே, தொழிலாளர்கள், இராணுவ வீரர்களின் பிரதிநிதிகள் என்பது தொழிலாளருக்கும் விவசாயிகளுக்கும் இடையே ஓர் கூட்டுறவைக் காட்டியது. அதே சமயத்தில் அவர்களுடைய அரசியல் அதிகாரத்தை நிர்வகிக்கும் அமைப்பாகவும் இருந்தது. அதாவது தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகிய இரண்டு வர்க்கங்களுடைய சர்வாதிகாரத்தை கையில் கொண்டிருந்த ஓர் அரசாங்க அமைப்பாக இருந்தது.

அதாவது இரு முரண்பட்ட அரசியல் அதிகாரங்கள்-முரண்பட்ட இரண்டு சர்வாதிகாரங்கள் விநோதமான முறையில் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டிருந்தன. சோவியத்துக்களில் பெரும்பான்மையாக மென்ஷிவிக்குகளும்-சோஷலிச புரட்சிக்காரர்களும் இருந்தனர். இதற்குக் காரணம் போராடி வெற்றியடைந்த தொழிலாளரும், விவசாயிகளும் தங்களுடைய அரசியல் அதிகாரத்தை முதலாளிகளின் பிரதிநிதிகளிடம் தாங்களாகவே கொடுத்துவிட்டனர்.

அரசியல் அநுபவம் அடையாதிருந்த ஏராளமான மக்கள் சிறு முதலாளித்துவ சூறாவளியினால் அடித்துச் செல்லப்பட்டனர். புரட்சி கண்ட முதல் வெற்றியைக் கண்டு போதை கொண்டனர். புரட்சியின் ஆரம்ப காலத்தில் சமரசவாதிகளின் கட்சிகளுடைய ஆதிக்கத்தின் கீழ் சென்றனர். முதலாளித்துவ சர்க்கார் சோவியத்துக்களின் வேலையை தடை செய்யாது என நம்பினர் இந்த நம்பிக்கையின் பேரில் அரசாங்க அதிகாரத்தை முதலாளிகளிடம் கொடுத்து விடுவதற்கு இசைந்தனர்.

இக்கட்டத்தில் போல்ஷ்விக் கட்சிக்கு பெரும் பணிகள் இருந்தன. மக்களுக்கு உண்மைகளை விளக்கிக் கூறி மக்களை விழிப்படையச் செய்ய வேண்டியிருந்தது. தற்காலிக சர்க்கார் ஏகாதிபத்திய தன்மை படைத்தது என்பதனை விளக்குவது அவசரகாரியமாக இருந்தது. சோஷலிச புரட்சிக்காரர்களும் — மென்ஷிவிக்காரர்களும் செய்த துரோகத்தை அம்பலப்படுத்தி தற்காலிக சர்க்காரை அகற்றிவிட்டு சோவியத்துக்களின் சர்க்காரை ஏற்படுத்தாத வரையில் யுத்தத்தை முடித்து சமாதானத்தை பெறமுடியாது என்பதை எடுத்துக்காட்ட வேண்டியிருந்தது.

இந்த வேலைகளை கட்சி உடனடியான பணியாக மேற்கொண்டது. மற்ற எதையும்விட அதிமுக்கியமான அவசர நடவடிக்கையாக கருதி நிறைவேற்ற ஆரம்பித்தது. திரும்பவும், பெப்ரவரி புரட்சி தொடங்கி ஐந்தே நாளில் சட்டபூர்வமான பத்திரிகைகளை போஷ்விக்கட்சி வெளியிட ஆரம்பித்தது. பெட்டோகிராட் நகரில் இருந்து பிராதாவும்-மாஸ்கோவில் இருந்து சோஷியல் டெமாகிரிட் என்ற பத்திரிகையும் புத்துயிர் பெற்று வெளிவந்தன. ஒக்டோபர் புரட்சி வெற்றி பெறுவதற்கு இப்பத்திரிகைகள் பெரும் பங்காற்றின. மிதவாத முதலாளிகளிடமும், மென்ஷிவிக்குகளிடமும் சோஷலிசப் புரட்சிக்காரர்களிடமும் நம்பிக்கை இழந்த மக்களுக்கு போல்ஷிவிக் கட்சி தன் தலைமைப் பதவியைக் கொடுத்துக் கொண்டிருந்தது. தொழிலாளர்களுடன சேர்ந்து செயலில் இறங்க வேண்டிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கை இராணுவத்துக்கு ஜே. ஆர். குழுவின் போதனை

**பொருள் : மனித உரிமைகள்.**

இலங்கை இராணுவத்தின் வெறித்தனமான, எழுந்த மானப்போக்குகள் அனைத்தும், ஈழவிடுதலைப் போராட்டத்தைக் கூர்மையாக நோக்கிவரும் அனைத்து நாடுகளின் கண்களிலிருந்தும் தப்பிவிடவில்லை.

'உலகிலேயே மிகவும் ஒழுக்கக் கேடான இராணுவங்களில் இலங்கையும் ஒன்று' என்று 'நியூயோர்க் டைம்ஸ்' செய்தித்தாள், இலங்கை இராணுவத்தை விமர்சித்துள்ளது.

இலங்கை இராணுவத்தின், மேலதிகாரிகளுக்குக் கட்டுப்படாத நிலை; தன்னிச்சையான முடிவெடுக்கும் கொலை வெறி; அப்பாவித் தமிழ் பேசும் மக்களைத் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாக்க வேண்டுமென்ற இரத்த வெறி தமிழ்ப் பெண்களைக் கற்பழிக்க வேண்டுமெனும் காமம், என்பன, இலங்கையின் இராணுவக் கட்டமைப்பின் அசிங்கத்தை வெளியுலகுக்குக் காட்டியுள்ளது.

இராணுவத்தின் இத்தகைய போக்கே' சர்வதேச மட்டத்தில் இலங்கை நாற்றமெடுத்து வருவதற்கும் காரணமாக இருக்கின்றதென்பது தெளிவு!

**ஏன் இந்த நிலைமைகள்?**

அரசவையின் முக்கிய மந்திரிகள் ஆள்மாறி ஆள் இராணுவப்பாசறைக்கு விரைந்தனர்; அளவுகடந்த இனவாதத்தை இராணுவத்திற்கு வாரியிறைத்தனர்; அவர்களது மனிதாபிமானத்தைச் சூறையாடினர். அவர்களை மனிதக் குணமே இல்லாமல் இருக்க மூளைச்சலவைகள் செய்யும் விதத்தில் சொற்பொழிவு நடத்தினர்.

எனவே, விளைவாக இதைவிட வேறென்ன தான் நடக்க வேண்டும்;

அண்மையில் ஈழப்பகுதியில் இராணுவத்திற்கெதிரான ஈழவிடுதலைப் போராளிகளின் அதிரடிகளின்போது அதிகளவு இராணுவத்தினர் அரசுதரப்பில் இழக்கப்பட்டமைக்கும், இராணுவத்தின் ஒழுங்கீனம் முக்கிய காரணமாகின்றது.

இராணுவத்தின் ஒழுக்கக் கேடுபற்றி ஜனாதிபதி கவலை கொண்டுள்ளாராம்.

10-03-'85, இலங்கை வானொலிச் செய்தியின்படி, இராணுவத்தினருக்கு அடிப்படை மனித உரிமைகளின் முக்கியத்துவம் பற்றியும்' மனித உரிமைகள் மீறிய செயல்களில் இராணுவம் ஈடுபடாதிருக்கவும் போதிப்பதற்காக குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி, பிரதம மந்திரி, பிரதம நீதியரசர், எதிர்க்கட்சித் தலைவர் என்போர் இக்குழுவில் அடங்குகின்றனர். இது, ''அடிப்படை மனித உரிமைகளின் முக்கியத்துவத்தை உணர்த்தும் தாபனம்'' என்ற பெயரில் மனித உரிமைகள் சங்கத்தின் ஆதரவுடன் நடக்கும். இத்தாபனம், மேலை நாடுகளில் வெளியாகியுள்ள மனித உரிமைகள் பற்றிய துண்டுப்பிரசுரங்களை மொழிபெயர்த்து இராணுவத்தினருக்கு விநியோகிக்கும்.

11ம் பக்கம் தொடர்ச்சி

அவசியத்தை இராணுவ வீரர்களும், விவசாயிகளும் உணரத் தொடங்கினர் புரட்சியை மேலும் ஒருபடி வளர்க்காத வரையில் முதலாளித்துவ தற்காலிக சர்க்காரை தள்ளிவிட்டு சோவியத்துக்களின் சர்க்காரை அந்த இடத்தில் அமைக்காத வரை விவசாயிகளால் சமாதானத்தை பெறமுடியாது நிலத்தையும் பெறமுடியாது என்பதை புரிந்து கொண்டனர். இதுவே ஒக்டோபர் புரட்சிக்கு ஓர் முன்னறிவிப்பாக இருந்தது.

இலங்கை தமிழ் பேசும் மக்கள் விடுதலையடைய வேண்டுமாயின், தமிழ் ஈழம் தவிர்க்க முடியாததொன்றாகிவிட்டது. இந்நிலையில் மிகவும் ஒடுக்கப்பட்ட மக்களான தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் வடக்கு, கிழக்கில் வாழும் விவசாயிகள், தொழிலாளர்கள் தமிழ் ஈழப் புரட்சியை முன்னின்று நடத்துவது அவசியமாகிறது. இல்லையேல் தமிழ் தரகு-முதலாளித்துவத்திடமேயே தமிழ் ஈழ ஆட்சியதிகாரம் போய்ச் சேர்ந்துவிடும். இவர்களிடம் ஆட்சியதிகாரம் போய் சேருமானால் இன்றைய கொடுங்கோலன் J. R. ஜெயவர்த்தனா ஆட்சியைவிட மோசமானதாகத்தான் இருக்கும். ரஷ்யபெப்ரவரி முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின்போது புரட்சியை நடத்தியவர்கள்-தொழிலாளர்கள். இதனால் அங்கு முதலாளிகள் அதிகாரத்தை நிலை நிறுத்த முடியவில்லை' இதனால் தான் தொடர்ந்து ஒக்டோபர் புரட்சி வெடித்தது. இதே போன்று தமிழ்த்தேசிய விடுதலைப் புரட்சியில் சிங்கள தரகு முதலாளிகளிடம் மட்டுமல்ல தமிழ் தரகு முதலாளிகளிடமும் இருந்து நம்மைக் காப்பாற்ற வேண்டுமெனில் தோட்டத் தொழிலாளர்கள்-வடக்கு, கிழக்கு விவசாய தொழிலாளர்கள் புரட்சிக்கு முன்னணி வகிப்பது அவசியமாகும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அமெரிக்க உதவியுடன் திருகோணமலையில் நவீன விமானத் தளம்

**கொலைக் கும்பல் ஈழத்தில் ஸ்திரம்.**

உலக நாடுகளிடையே மிகப் பெரிய ஏகாதிபத்திய நாடாக விளங்கும் அமெரிக்கா வானது இன்று, சர்வதேசரீதியாக தனது விஸ்தரிப்பு நிலைமைகளை அதிகரித்து வருதல் கண்கூடு! அமெரிக்காவின் கழுகுக் கண்களின் பார்வைக்குள்ளேயே அகப்பட்டு ஆட்டங் கண்டு விட்ட, கண்டு கொண்டிருக்கின்ற அரசுகள் ஏராளம். அதே வேளை இவ்வாறான நிலைமை கட்கு ஈடுகொடுத்து அவர்களை விரட்டியடித்து, உரிமைக் கொடியுயர்த்திய பெருமைககுரிய நாடுகளும் இல்லாமலில்லை.

இன்றைய சூழ்நிலையில் அமெரிக்க விஸ் தரிப்பின் பயங்கர ஆபத்தை உணர்ந்தும் வேறு வழி தெரியாமல் மக்களின் உரிமைகளைப் பறி கொடுந்து தன் தலைமையைப் பாதுகாத்துக் கொள்ளும் அரசியல் தலைவர்கள் நிச்சயம் அந்த மக்களால் தண்டிக்கப்படாமல் இருக்கப் போவ தில்லை. இதை அந்த மக்கள் உணர்ந்து செயல் படும் நாள் அண்மித்து விடுவதும் உறுதியே.

ஈழம், ஸ்ரீலங்கா நிலப்பகுதிகளில் இன்று அமெரிக்கக் கழுகுக் கண்பார்வை. குத்திட்டு நிற்கின்ற அபாயம் மக்களைக் கதிகலங்க வைக்கிறது. இந்த வேளையில்தான், ஈழதது நகரங்களுள் ஒன்றான திருகோண மலையில் புதிய விமான நிலையத்தை நிறுவுவதற்கான விரிவான திட்டம் தயாரிக்கப்படுவதாகவும்— இதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு, அமெரிக்க சர்வதேச 'போயிங்', விமான சேவை யிடம் கோரப்பட்டுள்ளதாகவும் ஸ்ரீலங்காவின் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமானது. அட்டகாச மாக மார்ச் 13ம் தேதி மாலை செய்தியறிக்கையில் தெரிவித்தது, இவ்வாறாக ஓர் அமெரிக்க விமான நிலையம் அமைக்கப்படுவதானது, மக்களுக்கு எவ்வாறான ஆபத்தை ஏற்படுத்தும் என்பதை ராஜதந்திரி, ஜெயவர்த்தனா அறியாதவனல்ல ஆனால் இன்று அவனையோ அல்லது அவனது சகாக்களையோ பொறுத்த வரைக்கும்; ஏகாதிபத்தியப் பயங்கர வாதத்தி லிருந்து அப்பாவி மக்களைக் காப்பாற்றுவதை விட; மக்களிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்வதே அவசியமாயுள்ளது. எனவே இவ் வாறு விமான நிலையம் ஏராளமாகவும் தாராள மாகவும் ஸ்ரீலங்காவிலோ அல்லது ஈழத்திலோ நிறுவப்படுவதெல்லாம் எதிர்ப்புக்குரியதல்ல. ஆனால் இதனை முறியடிக்கின்ற சக்தி மக்க ளிடம்தான் இருக்கிறதென்பதை ஜெய வர்த்தனாவோ அல்லது அமெரிக்க ஏகாதி பத்தியமோ அறியாமலில்லை. அவர்கள் பயன் படுத்துவதெல்லாம் மக்களின் அப்பாவித்தனத் தையும் அறியாமையையுமே!

விமான நிலைபத்தை திருகோணமலையில் அமைப்பதற்காக இங்கு கூறப்படுகின்ற காரணங்கள் இவை; சர்வதேச நடவடிக்கை களையிட்டும் இந்த விமான நிலையத்தின் அமைவு அவசியமாகிறதாம். அதே வேளை பிரதான விமான நிலையத்திலிருந்து, வேறோர்

அரச கூலிகளின் தாக்குதலுக்குள்ளான வீடு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விமான நிலையத்திற்கு விமானங்களைத் திருப்பவேண்டுமாயின், அத்தகைய சர்வதேச விமான நிலையங்கள் 'கட்டு நாயக்கா' விமான நிலையத்திற்குத் தூரத்திலே திருச்சி, திருவனந்தபுரம் ஆகிய இடங்களில் தான் உள்ளனவாம். இவற்றைவிட, திருகோண மலையிலேயே ஒரு 'சுதந்திர வர்த்தகவலையம்' அமைக்கப்படவிருப்பதனால் இதற்கெல்லாம் இவ்வாறான் ஒரு விமான நிலையம் அவசிய மாம் என்று ஸ்ரீலங்கா வானொலி அறிவித்தது.

இங்கு மிகவும் புத்திசாலித்தனமாகவே காரணங்கள் கூறப்பட்டாலும் இவற்றின் பின் விளைவுகள் மக்களை எவ்வாறான அடிமை நிலைக்கு இட்டுச்செல்லும் என்பது மக்களுக்குப் புரிய வைக்கப்படவேண்டியதொன்றாகிறது. 'கொழும்பு நகரத்திலே ஒரு சுதந்திர வர்த்தக வலையத்தை இந்தத் தரகு முதலாளித்துவ அரசு அமைத்தமையால் ஏற்பட்டுள்ள அந்நியத் தலையீடுகள் போதாது என்று திருகோண மலையில் இன்னுமொன்று!

இவ்வாறு இன்னுமொரு சுதந்திர வர்த்தக வலயம் திருகோணமலையில் அமைக்கப்படும் போது ஈழத்து மண்ணிலே அந்நிய நாட்டுக் கம்பனிகள் பலமாகக் காலூன்றிவிட வாய்ப் புண்டு, மிகச் சுலபமாகவே எமது உள்நாட்டுப் பிரச்சினைகளில் அந்நிய நாட்டவர் தலையிட்டு விடுவர், எல்லாவற்றிற்கும் மேலாக ஈழத்து மக்களின் விடுதலைத் தயாரிப்புகளை அவ்வப் போது முறியடித்து விடவும் அவாகள் முயல்வார்கள்.

தற்போதைய சூழ்நிலையில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அமைதியைக் குலைப்பதற்காக ஏகாதிபத்தியங்கள் போட்டி போட்டுக் கொண்டு ஆங்காங்கு இராணுவத் தளங்களையும் கம்பனிகளையும் நிறுவும் நிலையில் இருக்கும்போது, இதற்கு ஈழத்து மண்ணும் இடம் தருவது முறையா? அல்லது வேறு எந்த மண்ணிலாவது இவர்களுக்கு இடம் தருவதும் சரிதானா?

எனவே ஈழத்து மக்களே! இந்து சமுத்திரப் பிராந்திய மக்களே! அமைதி விரும்பிகளே! ஒன்றுபட்டு எமது பிராந்தியத்தின் அமைதியை நிலை நிறுத்துவோம்! ஏகாதிபத்தியப் பயங்கர வாதிகளை விரட்டியடிக்க ஒற்றுமையுடன் கர முயர்த்துவோம்!! அப்போதுதான் நமது மக்களின் முழுமையான விடிவு சாத்தியமாகும்.

# மாற்றம்

இன்னல் இனி விலகும்
பொங்கும் இன வெறியை
பொசுக்கித் தீர்த்திடவே
திண்தோள் மறவர் குழாம்
தரித்தது துப்பாக்கியை
மெல்ல இருள் கலைய
இன்னல் இனி விலகும்.

செழுக்கிய சிற்பங்களாய்
மாலைத் தென்றலிலே
மெல்ல நடை பயிலும்
எங்கள் மாதர் குலக்
கற்போ பறி போச்சு
கவினுடலோ கருகலாச்சு.

சந்தம் மேலேறி
சிந்தும் தவழ்ந்து வரும்
ஈழத்து வானமெல்லாம்
ஒப்பாரி தொடக்கம்
மரண வொலியோடு
தப்பாமல் குறிபாயும்
வேட்டொலியும் கேட்கலாச்சு

ஏற்றம் இறைத்திடவே
எழுந்துவரும் நெற்கதிரும்
பாட்டம் பார்த்துவரும் பருவமழையும்
இரத்த நிறமாச்சு ஈழத்தில்
இரத்தமே ஓடலாச்சு.
மனிதக் குணமில்லா
இரத்தவெறி பிடித்தபடை
நித்தம் செய்யும் கொலையால்
தமிழினமே அருகலாச்சு
தார்மீகம் செத்தாச்சு.
ஆனால்—

இன்னல் இனிவிலகும்
பொங்கும் இனவெறியை
பொசுக்கித் தீர்த்திடவே,
திண்தோள் மறவர் குழாம்
தரித்தது துப்பாக்கியை
மெல்ல இருள் கலைய
இன்னல் இனி விலகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சர்வதேசரீதியில் வலுவடையு ஈழ விடுதலைப்போராட்டம்

- ஈழத்தில் மனித வேட்டை-UNOவில் எதிரொலி.
- சர்வதேச சட்டவல்லுநர் சங்கம் அறிக்கை.

சுதந்திர இலங்கை! இந்த வார்த்தை 1948 இலிருந்தே இலங்கை மக்களால் வார்த்தையாகப் பேசப்பட்டு வந்தது! இன்னும் 'சுதந்திர இலங்கை' தேடப்பட்டுக் கொண்டு தான் இருக்கிறது. ஆமாம் 1948 இல் பிரிட்டிஷ் ஆட்சியிடமிருந்து தீவை மீட்டெடுப்பது மட்டுமே சுதந்திரமாகக் கருதப்பட்டதே தவிர, மக்களின் வாழ்க்கைத்தர உயர்வுக்கு வழிகாணும் நடவடிக்கை இருக்கவில்லை. ஆனால் இன்று; ஒரு பிரிட்டிஸ் போனால் இன்னொரு அமெரிக்கா என்ற நிலையில்தான் சுதந்திர இலங்கை!

இந்த நிலையில், சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகட்குச் சமமாக தமிழ் பேசும் மக்களுக்கு உரிமை வழங்கப் படவில்லையே என்ற பாகுபாடு, இன்று இனப்பிரச்சினை-தனி ஈழப்பிரிவினை-ஆயுதப் போராட்ட நடவடிக்கை என்ற நிலைமையை உருவாக்கி விட்டமை தெளிவு. இப்போது கூட, ஆயுதப் போராட்டத்தின் மூலமே ஈழம் சாத்தியம் என்ற நிலை சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்ற பின்பும் பேச்சு வார்த்தைக்கும் UNO இல் இலங்கை அரசு தரப்புக்கும் வெகு தூரம் என்பது வட்டமேசை மாநாடுமூலம் வெளிநாடுகளில் அம்பலமான பின்பும் தெரிவித்த கருத்து விசித்திரமாயுள்ளது. அதாவது. ''தமிழ் பேசும் மக்களின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண இலங்கை உறுதி; ஆனால் பயங்கரவாதத்தை (ஈழப் போராட்டம் இவ்வாறுதான் ஸ்ரீலங்காவால் வருணிக்கப்படுகிறது) நாம் ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தால்தான் இது சாத்தியம்'' என்று UNO மனித உரிமைகள் கமிஷனில் இலங்கை கருத்துத் தெரிவித்தது.

இதற்கெல்லாம் தேவையே இல்லை. ஏனெனில் ஆரம்பத்தில் வட்டமேசை மாநாடு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரேயே தமிழ் பேசும் மக்கள் தீர்மானித்துவிட்டனர்-ஆயுதப் போராட்டத்தைத் தவிர, ஈழ மண்ணை மீட்டெடுக்க வேறு வழியே இல்லையென்று! அதற்காக அம் மக்களது போராட்ட நடவடிக்கைகளும் கூர்மைப்பட்டுள்ள இந்த வேளையில் ஸ்ரீலங்கா அரசு இப்படிப் பிதற்றியுள்ள தென்றால் வியப்புக்குரியதுதான்!

இவ்வாறு ஸ்ரீலங்கா அரசின் கருத்து தெரிவிக்கப்பட்டபோது UNO இல் உடனடியாக எதிர்க் கருத்தும் கூறப்பட்டது' அதாவது; ''இலங்கையில் தமிழர்கள் அதிகமாக வாழும் மாவட்டங்க ளுக்கு அரசு அளிக்கமுன் வந்த அந்தஸ்தானது, தமிழ் பேசும் மக்களுக்கு 'சுயாட்சி வழங்குவ தற்கு எந்த வகையிலும் உதவுவதாக இருக்க வில்லை.''

''தனி ஈழத்துக்காகப் போராடுகின்ற தீவிரவாதிகள் தொடுத்த தாக்குதலையடுத்து, சிங்கள மக்கள் தமிழ் மக்களைத் தாக்காவண்ணம் அரசு நடவடிக்கை எடுத்தது உண்மையே. எனினும் அரசின் இராணுவத்தினரைப் பொறுத்தவரைக்கும் துரதிஷ்டவசமாக இப்படிக் கூறமுடியாது. பல நேரங்களில் இராணுவத்தினர் வெறி பிடித்தவர்களைப் போல் அப்பாவித் தமிழர்களைச் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள்'' இவ்வாறு, இந்தியா மற்றும் UNO கூட்டத்தில் பார்வையாளராகக் கலந்து கொண்ட சர்வதேச ஜூரிகள் கமிஷன் பொதுச் செயலாளர் டாக்டர் மோட், கருத்தை வெளியிட்டார்.

இதேபோல் சர்வதேச சட்ட நிபுணர்கள் சங்கமும், தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாகத் தமது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளமை, ஒடுக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களது பிரச்சினை, சர்வதேச மயப்படுத்தப் படுகின்றமைக்கு மேலும் ஆதாரம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''இலங்கையில் அரசியல் தீர்வு காண்ப தற்கு முதலில் இலங்கையில் தமிழ் சிவிலியன்கள் (தமிழ் குடிமக்கள்)கொல்லப்படுவது நிறுத்தப்பட வேண்டும்; இலங்கை இராணுவம், ஒழுங்கு நடவடிக்கைகளைக் கவனிக்க வேண்டும், அப் போது தான், தமிழ் மக்களுக்கு தமது 'பிரச்சினைக்கான அரசியற்தீர்வு பெறப்படு தலின் சாத்தியத்தில் நம்பிக்கை வளரும்'' என்று சர்வதேச சட்ட நிபுணர்கள் சங்கம் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இவ்வாறு தமிழ் பேசும் மக்களின் நியாய மான போராட்டம், சர்வதேசரீதியாக நியாயப் படுத்தப்படுகின்றது. பாஸிஸ அரசின் விஷமப் பிரசாரங்கள் ஆங்காங்கே முறியடிக்கப்படு கின்றன.

சர்வதேச ரீதியாக பரவிவரும் ஒடுக்கப்படும் தமிழ்ப்பேசும் மக்களுக்கான ஆதரவுகள் ஸ்ரீலங்கா அரசின் மூடிமறைப்புகளையும் மிஞ்சி —அவதூறுகளையும் தாண்டி உலக மக்கள் மத்தியில் தனியிடத்தைப் பிடித்து வருகின்றது.

அரசின் அரக்கத்தனமான ஆளுமைகள், இலங்கையரசின் பொருளாதாரத்தில் கணிச மான அளவு பாதிப்பை ஏற்படுத்திவருவது குறிப்பிடத்தக்கது. முக்கியமாக, உல்லாசப் பயணிகள் வருகையும், வெளிநாட்டு முதலீட் டார்களது வரவும் பெருமளவு குறைந்து வரு கின்றது.

இதனை மையப்படுத்தியே இலங்கை நிதி யமைச்சர் பின்வருமாறு கூறியிருக்கின்றார்.

''நாம், நமது நாட்டில் தோன்றியுள்ள இனப்பிரச்சினைகளை வெளி நாடுகளில் பெரிது படுத்திக் கூறுவதன் மூலமோ, கவலைப் படுவதன்மூலமோ தமது நாட்டின், பொரு ளாதாரமே கணிசமான அளவுக்குப் பாதிக்கப் பட்டு வருகின்றது. உல்லாசப் பயணிகள் வருகையும், வெளிநாட்டு முதலீட்டாளர்களது வருகையும் தற்சமயம் குறைந்து - வருவது தெரிந்ததே!''

(இலங்கை வானொலிச் செய்தி)
17—03—'85)

இலங்கை இன பிரச்சினையைப் பற்றி அரசின் வெளிநாட்டு மோஷடிப் பிரச்சாரங்கள் பொருளாதறத்தில் கொண்டு வந்துள்ள நெருக்கடி நிலைமகள் இப்போதுதான் உணரப்படத் தொடங்கியுள்ளன.

அரசதரப்பில், தமது அடாவடித் தளங்களை மூடிமறைக்கும் நிலைமைகள் தொடாந்தாலும், அத்தனை மூடிமறைப்புகளும், நமது விடுதலை யில் அபிமான முள்ள மனிதநேய சக்திகளால் சர்வதேசரீதியில் கிண்டிவிடப்படுகின்றன. அரச பொருளாதாரம் மென்மேலும் அதள பாதாளத்தை நோக்கிச் செல்லுமென்பது உறுதி யாகி வருகின்றது.

நமது விடுதலை தொடர்பானதும், ஸ்ரீலங்கா அரசின் வன்முறை தொடர்பானது மான சர்வதேச பிரச்சாரங்களை முறியடிக்கும் முயற்சியில் இலங்கையரசு புதிய திட்ட மொன்றைக் கொண்டுவந்துள்ளது, அதாவது,

உலகெங்குமுள்ள இலங்கைத் தூதரகங் களிலும் மேலும் நன்கு பயிற்றப்பட்ட அரச அபிமானிகள் அனுப்பி வைக்கப்பட போகின் றார்கள். இவர்கள், அந்தந்த தேசங்களில், இலங்கையரசுக்கு எதிராக வெளிவரும் செய்தி களுக்கான மறுப்பறிக்கைகளை உடனுக்குடன் அந்நாட்டுப் பத்திரிகைகளுக்குப் பேட்டியளித் தல் மூலம், இலங்கையரசை நல்ல பிள்ளை யாக நியாயப்படுத்தப் போகின்றார்கள்.

எனவே, உலகமக்களே, உங்கள் ஆதரவு என்றும் நியாயத்தின் பக்கம் இருக்கும்வரை, தரகு முதலாளிகளாலோ, அரச பயங்கரவாதி களாலோ, சர்வதேச பயங்கரவாதிகளாலோ ஒடுக்கப்பட்ட மக்களது விடிவுக்காகத் தொடுக்கப் பட்டிருக்கும் எந்தப் போராட்டத்திற்கும் தோல்வியென்பது சரித்திரத்திலேயே இருக்காது இந்த நம்பிக்கையுடன் ஈழமக்களின் கரங்கள் ஒன்றிணைந்து உயர்த்துகின்ற துப்பாக்கிகள், பொது எதிரியைக் குறிவைத்து ஈழமண்ணை மீட்டெடுக்கும் என்பதில் ஐயமில்லை.

அஞ்சலிக்கவிதை தோழர் பரதிவண்ணன் (ஈரோடு) ஆல் எழுதப்பட்டது.

www.tamilarangam.net



# 'ஒரு சீனப் போராளியின் தியாக உணர்வு'

மக்கள் சீன விடுதலைப் போராட்ட காலமது. சீன விடுதலையில் விவசாயிகளின் பங்கு முக்கிய மானது. யுத்தமும் உற்பத்தியும் சரிநிகர் இருந்தது. அறுவடைக்காலம்; ஆனால் வானத்தில் மழை முகில்கள் வட்டமிட்டன. செஞ்சேனையில் முக்கிய உறுப்பினரான தோழர் மென்கோ தனது சகதோழர்களுக்கு முகில்களை விரட்டியடிக்கும் ராக்கட்டுக்களை தயாரிக்கும் முறையை விவரித்துக் கொண்டு இருந்தார். நிலத்தில் ராக்கட் திறந்த நிலையில் இருந்தது. மருந்துகள் கலக்கப் பட்டன. அந்தோ விபரீதம்! ராக்கட் நிலத்திலேயே வெடிக்கும் நிலைக்கு வந்தது. இன்னும் ஒருநிமிட நேரத்தில் சுற்றியுள்ள இருபத்தி ஏழு தோழர்களும் சுக்கு நூறாகப் போகிறார்கள். அதன் மூடி மட்டும் மூடப்படுமானால் ராக்கட் மேலெழுந்து வெடிக்கும் மூடி அருகில் இல்லை கண்இமைக்கும் நேரத்தில் மென்கோ தனது நெஞ்சினால் ராக்கட்டை மூடினார். ராக்கட் மேலெழுந்தது. வீரமிகு மென்கோ சீன மக்களின் இதயத்தில் நீங்காது இடம் பெற்று விட்ட அந்த தியாக உள்ளம் சுக்கு நூறாகியது. வரலாற்றில் இடம் பெற்றுவிட்ட தோழர் மென்கோ விடுதலைப் போராளிகட்கு ஒரு எடுத்துக் காட்டு. தனது இழப்பினால் இருபத்தி ஏழு தோழர்களின் உயிர்களை காப்பாற்றினார். ''எதிரிகளுக்காக சாவது இறகைவிட லேசானது மக்களுக்காகசாவது மலையைவிட பாரமானது'' என்று வார்த்தைகள் அவர் மனதில் நிறைந்திருந்தது போலும்.

—தோழர் பாலா

---

ஏகாதிபத்திய.....

(8ம் பக்க தொடர்ச்சி)

3ம் உலகப்போருக்கான தயாரிப்புகளை ஏகாதிபத்தியங்கள், அனைத்து நாடுகளிலும் முடுக்கிவரும் இவ்வேளையில், அனைத்து நாடுகளிலிருந்தும் ஏகாதிபத்தியங்களுக்கு மக்கள் சக்தி காட்டும் எதிர்ப்பு — 3ம் உலகப் போர் பற்றிய பயத்தை அகில உலக மக்கள் மத்தியிலிருந்தே கிள்ளியெறியும் என்பது உறுதி!

MEDICAL UNIT FOR SERVICE OF TAMILS .M.U.S.T.

## தமிழர் நல மருத்துவ அமைப்பு

அரச இராணுவ வெறியாட்டத்தால் நாளும் அழிந்துகொண்டுவரும் தமிழ் பேசும் மக்களினதும் தமிழ் ஈழ விடுதலைப் போராளிகளினதும் மருத்துவ்நலன் பேணுமுகமாக - தமிழர் நல மருந்துவ அமைப்பு அனைத்து இயக்கங்களின் ஆதரவுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பொது அமைப்புக்கள் உருவாதல் தமிழ்ஈழ விடுதலைப் போராட்டத்திற்குப் பெரிதும் உதவியாக இருக்கும். இவ்வமைப்பை வலுப்படுத்தவேண்டிய பொறுப்பு பொதுமக்களுடையது. எனவே, பரந்துபட்ட அளவில் தமது சேவைகளைத் தொடர தமிழர் நல மருத்துவ அமைப்பு அனைவரினதும் ஒத்துழைப்புக்களையும் அன்புடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இணைந்த கரங்கள் உயர்கையில் இருளும் பின் வாங்கும் இனி !

தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்கு தமிழ்ஈழ விடுதலைப் போராட்டமே வழியென்றாகி விட்டது. போராட்டத்தின் இன்றைய கால ஓட்டத்தில் அரச படையினரை வலுவானதும், முறையானதுமான தாக்குதல்களுடன் முகங்கொடுக்க வேண்டிய கட்டாயம் போராளிகளைச் சார்ந்துள்ளது.

நாளுக்கு நாள் தமிழ் பேசும் மக்கள் அரச இராணுவக் குண்டர்களினால் அழித்தொழிக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இதேவேளை, ஒரே நோக்கத்துக்காக உருவாக்கப்பட்ட விடுதலை இயக்கங்கள் தமது தனித்தன்மைகளைப் பேணிக்கொண்டு, தமக்கிடையிலான முரண்பாடுகளைத் துப்பாக்கி தீர்த்துவைக்கும் துர்பாக்கிய நிலைக்குள்ளாகியுள்ளன,

கொண்ட நோக்கத்தைத் தேவைகருதி விரைவில் செயல்படுத்த வேண்டிய அவசியங்கள், பலதரப்புக்களிலிருந்தும் இயக்கங்களை நிர்ப்பந்தங்களாக வலியுறுத்தின. இயக்கங்களின் இணைவுகளினதும் ஒன்றுபட்ட போராட்ட நடவடிக்கைகளினதும் அவசியங்கள் சுட்டிக்காட்டப்பட்டன.

இவை, வெளி முயற்சிகளாகத் தொடர, ஏலவே 1984-ஏப்ரலில், சில அடிப்படைக் கொள்கைகளுக்கமையக் கரமிணைத்துக் கொண்ட தமிழ்ஈழ விடுதலை இயக்கம் (TELO), ஈழப்புரட்சி அமைப்பு (EROS), ஈழப்புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) என்பன முக்கூட்டணியாகத் தமது போராட்ட செயற்பாடுகளை முறைப்படுத்திவந்ததுடன், ஏனைய இயக்கங்களுக்கும் நேசக்கரம் நீட்டிவந்தன, இம்முக்கூட்டணியமைப்பு அண்மையில். ஈழ தேசிய விடுதலை முன்னணி (ENLF) எனும் பொதுப்பெயரின் கீழ் அணிவகுத்தது.

(22ம் பக்கம் பார்க்க)



பல்வேறு பிரிவுகளாக செயல்பட்டு வந்த விடுதலை இயக்கங்கள் ஒன்று சேர்ந்தன. படத்தில் இருப்பவர்கள்: சிறி சபாரத்தினம் (தமிழ் ஈழ விடுதலை இயக்கம்), பத்மநாபா (ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி), பிரபாகரன் (தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்), பாலகுமார் (ஈழப்புரட்சி அமைப்பு)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மீண்டும் பேச்சு வார்த்தை.....?

இலங்கைத் தமிழர் பிரச்சினை, அண்டை நாடுகளிலும் பொதுவாக உலக நாடுகள் அனைத்திலும் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளது. தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தைச் சாட்டாக வைத்து இலங்கையில் நிலை கொண்டுள்ள சர்வதேச பயங்கரவாதிகளும், மற்றும், ஸ்ரீலங்கா அரசும், அப்பாவித் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் கட்டவிழ்த்து விட்டிருக்கின்ற அரச பயங்கரவாதச் சம்பவங்களும் அனைத்து நாடுகளின் கண்களையும் இலங்கைமீது குத்த வைத்துள்ளன.

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வே சாத்தியமென பல நாடுகளிலிருந்தும் அபிப்பிராயங்கள் வந்தவண்ணமுள்ளன.

குறிப்பாக இந்தியாவும், இதே தீர்வையே கருத்திற்கொண்டு அதன் பெருமுயற்சியின் பலனாக வட்டமேசை மாநாடு கூட்டப்பட்டு அது, வெறுமனே புஸ்வாணமாகிப்போன கதை இன்னும் மறக்கப்படவில்லை.

அதற்குள், மீண்டும் பேச்சு வார்த்தைக்கான முயற்சிகளில் இந்திய அரசு முயன்று வருகின்றது.

இந்தியாவைப் பொறுத்தவரை, இலங்கைத் தமிழர் பிரச்சினை இந்தியாவில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பது உண்மை. இலங்கையிலிருந்து தமிழகத்துக்குத் தப்பி வந்துள்ள அகதிகள்; பாக்குநீரிணைப் பகுதியில் தமிழக மீனவர்கள் தாக்குதலுக்குட்படுத்தப்படல்; ஸ்ரீலங்கா அரச வன்முறையின் விளைவாக தமிழக மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள மன உணர்வுகள் என்பன ஒருபுறமிருக்க, இனப் பிரச்சினையை மையமாக வைத்து இலங்கையில் நடக்கும் ஆயுதக் குவிப்புக்களும் இலங்கைக்குக் குடிப்பெயரும் சர்வதேச பயங்கரவாதிகளின் உளவு ஸ்தாபனங்களும் இந்து சமுத்திரத்தில் பிராந்திய நாடுகளுக்குப் பொதுவான அச்சுறுத்தலாக இருப்பினும், இவை இந்தியாவுக்குப் பெரும் அச்சுறுத்தலே! எனவே அண்டை நாடுகளின் இராணுவ அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுத்துவரும் இந்திய அரசுக்கு, இலங்கையரசின் இராணுவத் தயாரிப்புக்கள் தலையிடிக்குரியவையே!

எனவே, இத்தகைய நெருக்கடிகளின் மத்தியில் இந்தியா அண்டை நாடுகளுடன் இப்போது சமாதானப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு வருவது தவிர்க்கமுடியாதது. எனவே, இலங்கை விவகாரத்திலும், இனப் பிரச்சினையைச் சமாதானமாகத் தீர்த்துவைக்கும் முயற்சியில் இந்தியா இறங்கியிருப்பதும் வியப்பில்லை.

ஆனால், தமிழ் பேசும் இனத்தைப் பொறுத்தவரை ஸ்ரீலங்கா பேரினவாத அரசின் வன்முறைகள், ஒடுக்குமுறைகளிலிருந்து தமிழ் பேசும் இனத்தைக் காப்பாற்றும் முயற்சியில் ஸ்ரீலங்கா தரகு முதலாளித்துவ அரச பீடத்தவருடன் பல தடவைகள் பேச்சு வார்த்தைகள், ஒப்பந்தங்கள் என்பனவற்றில் ஈடுபட்டு தோல்வியையும், வெட்கக்கேட்டையும் தழுவிக் கொண்ட வரலாறுகள் இவர்களுக்கு ஏராளம்!

தமிழ் பேசும் இனத்திற்கு கடந்த பல வருடங்களாக கிடைத்த அனுபவங்களே இவர்களைத் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் முன்னெடுப்பதற்குத் தூண்டியது. இந்தவழியின் மூலமாக மட்டுமே தமது இறைமைகளைப் பேணமுடியுமென்பதனை தமிழ்பேசும் இனம் நன்கு உணர்ந்துவிட்டது.

மேலும் அண்மைக்காலமாக JR அரசு தொடுத்துவரும் கண்மூடித்தனமானபேரினவாத ஒடுக்குமுறைகள் JR அரசுக்கும், தமிழ்பேசும் மக்களுக்குமிடையிலான தூரத்தை வெகுதூரங்களாக்கிவிட்டன. இதனால், சமாதானப் பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கைகொண்ட சில சக்திகள் கூட, இந்த விவகாரத்தில் எட்ட நிற்கின்றன.

இந்த நிலையில், மீண்டும் பேச்சு வார்த்தை....? சமாதான முறைத் தீர்வுகள்...?

இவ்வேளையில்தான், நாம் சில எதிர்பார்ப்புகளை மீட்கவேண்டியுள்ளோம்.

(1) தமிழ்பேசும் மக்கள், ஸ்ரீலங்கா தரகு முதலாளித்துவ அரசை நம்பி, எந்தத் தீர்வையும் ஏற்கத் தயாராகவில்லை. இவற்றை, தமிழ்பேசும் இனத்தின் கடந்தகால அரசியல் அனுபவங்களும், JR அரசு நடந்துகொண்ட விதமும் நன்கு சுட்டிக் காட்டும்!

(2) தமிழ்பேசும் மக்கள், மீண்டும் சுபிட்சமாக வாழக்கூடியதான எந்த முற்போக்குத் தீர்வையும் அரசு முன்வைப்பதில் தயக்கம் காட்டுமென்பது நிச்சயம்! ஏனெனில், இப்போது ஸ்ரீலங்கா அரசு சர்வதேச பயங்கரவாதி

(22ம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உங்கள் கல்லறைகளை
எங்கள் கால்கள்
கடந்து செல்லுகையில்
ஒரு இழப்பின் சோகம்
எம் இதயத்தை இறுக்குகிறது!

ஆசைகளையும்
கனவுகளையும்
அப்புறப்படுத்திவிட்டு
ஆயுதமேந்திய
அந்தத் தினங்கள்...


ஒரு இலட்சியப் பயணத்திற்காய்
இணைந்து கைகோர்த்த
அந்த இறுக்கத் தோழமை...
ஒவ்வொன்றாய்
கண்களுக்குள் வந்து போகிறது!

நம் மண்ணின் மீட்புக்காக
உங்கள் உடல்கள்
மண்ணில் சாய்ந்தபோதும்
துப்பாக்கியை
இறுகப்பற்றிய கைகளை
அகற்றவே முடியாதபடி இறுகிய
உங்கள் உறுதியினை
இக்கணம் நினைவு கூர்கிறோம்.

●

எம் பூமியில்
தெறித்த
உங்களின்
உதிரத் துளிகள்
நம்பிக்கை நட்சத்திரங்களாய்
பிரகாசித்து
— இலட்சிய வழிகாட்டியாய்
எம் பயணத்தை வேகப்படுத்தும்!


●



தோழர் கமால்



தோழர் விஜி



தோழர் சாள்ஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## வீர அஞ்சலி வரிகள்...



தோழர் சுந்தர்



தோழர்குட்டி



தோழர் தீபன்



தோழர் றெக்ஸ்



தோழர் குணம்



தோழர் கோபி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(19ம் பக்க தொடர்ச்சி)

களின் கூட்டால் வலுப்பெற்றுள்ளது. எனவே, தமிழ்பேசும் மக்களால் திருப்தியாக ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய எத்தீர்வையும் வழங்கு மளவுக்கு JR அரசு இறங்கி வரமாட்டாது. இத்தகைய ஒரு இறக்கத்தை - தமிழ் ஈழ விடுதலைப் போராளிகளின் வலுவான சக்தி மிக்க மக்களாயுதப் போராட்டமே சீக்கிரம் ஏற்படுத்துமென்பது உறுதி!

(3) கடந்த காலத்தில் 'வட்டமேசை மாநாடு' கூடித் தீர்வுகள் பெறுவதாக ஒருவருட காலம் இழுத்தடித்ததில், ஸ்ரீலங்கா அரசு தமது இராணுவ பலத்தைப் பன்மடங்கு பெருக்கிக் கொண்டுள்ளதென்பதை எவரும் மறக்கவோ, மறுக்கவோ முடியாது.

இப்போது, தமிழ்ப் போராளிகள் ஆயுதங் களைக் கைவிட்டு விட்டு - பேச்சு வார்த்தைக்கு வரவேண்டுமென இலங்கையரசு அறைகூவல் விடுத்திருக்கின்றது. இந்த வேளையில்கூட பேச்சுவார்த்தைகள் இழுத்தடிக்கப்படமாட்டா தென்பதற்கு - ஸ்ரீலங்கா அரசு இராணுவ பலத்தைப் பெருக்காதென்பதற்கு - அரச பயங் கரவாதம் அவல தமிழ்பேசும் மக்கள்மேல் பாயாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

எனவே, பேச்சுவார்த்தைகள் சாத்திய மாகுமா? தமிழ்பேசும் மக்களது இறைமைகள் மீட்கப்படுமா? வழங்கும் தீர்வுகள் இனவாதப் புயலில் நிலைக்குமா?

எங்கள் பிரச்சினையில் உதவுவதாக முன் வரும் எவரும், நமது பிரச்சினையின் அக, புற காரணிகளை ஆராய்ந்து செயலில் இறங்கும் போதுதான் அவர்களது முயற்சியின் வெற்றிகள் முழுமை பெறுகின்றன.

---

(18ம் பக்க தொடர்ச்சி)

இணைவுகளுக்கான இன்றைய வரலாற்று நிர்ப்பந்தத்தில், ஏனைய பலமான இயக்கங் களும் பொது எதிரியை வீழ்த்துவதற்காக ENLFஇன்கீழ் அணிவகுக்க முன்வந்தமை வியப்பில்லை.

ENLFஇன் வேண்டுகோளுக்கிணங்க, தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் (LTTE) அவசியமுணர்ந்து ENLFஇன் கீழ் அணிவகுத்துள்ளனர். மேலும், தமிழ்ஈழ மக்கள் விடுதலைக் கழகத்(PLOT)தையும் ENLFஇன் கீழ் அணிவகுத்து-எதிரியைக் கூட்டாக முறி யடிக்கும் செயற்பாடுகளில் வெற்றியீட்ட ENLF முயன்று வருகின்றது.

---

# "இரு ஓநாய்களின் சந்திப்பு"

ஏகாதிபத்திய, முதலாளித்துவ பொரு ளாதாரப் பொறியின் சுமையை மென்மேலும் ஏழைமக்களின் முதுகில் ஏற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையாளர்க ளான J. R. ஜெயவர்த்தனா-ஜியாவுல்கக் ஆகி யோர் 29—03—1985ல் பாகிஸ்தானில் சந்திக் கிறார்கள்.

பாகிஸ்தானை தொழில் மயமாக்க முயன்ற குற்றத்திற்காகவும்—மூன்றாம் மண்டல நாடு களுக்கென்றோர் புறம்பானதோர் வங்கி அமைப்பு முறையும், சுதந்திர, வர்த்தகமும் தேவை என்பதை கூட்டுசேரா நாடுகளின் மகா நாட்டில் முன்மொழிந்த குற்றத்திற்காகவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நேரடிப் பணிப் பின்பேரில் பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி சுல்பிகார் அலி பூட்டோவை கொலை செய்த வரும்—பாகிஸ்தானில் பொருளாதாரப் பொறி யின் சுமை தாங்காது பொங்கி எழும் மக்களை, இந்திய படையெடுப்பு என்ற பீதியை உருவாக்கி யும்,—மக்களை ஒன்றுபடுத்தும் அப்போராட் டங்களை நசுக்குபவருமான பாசிஸ வெறியன் ஜியா-வுல்-கக்கும்; நிராயுதபாணியான அப் பாவி தமிழ் மக்கள்மேல் பிரகடனப்படுத்தப் படாத போரை கட்டவிழ்த்து விடுபவரும்—1980ம் ஆண்டு 40,000 சிங்களம் பேசும் தொழி லாளர்களை நடுவீதிக்கு துரத்தியவரும்—அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மூன்றாம் உலக தயாரிப்பிற்காக, ஸ்ரீ லங்காவில் அமெரிக்க உளவு மாளிகை அமைக்க இடம் அளித்தவரு மான பாசிஸ வெறியன் J. R. ஜெயவர்த்தனாவி னதும் சந்திப்பானது, பாகிஸ்தான்—ஸ்ரீலங்கா—தமிழ் ஈழ ஒடுக்கப்பட்ட மக்கள் மீதான அடக்கு முறைக் கொடுமைகள் பற்றி திட்டம் தீட்டுவதற்கே.

இப் பாசிஸ வெறியர்களின் சந்திப்பிற்கான காரணங்களையும் அவர்கள் தீட்டும் சதித் திட்டங்களையும் அம்பலப்படுத்துவோம் உலக ஒடுக்கப்பட்ட மக்களது எதிரிகளை இனங் காட்டுவோம்.

★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒடுக்கப்பட்ட சிங்கள மக்களே சிந்தியுங்கள்

பூகோளத்தின் மேற்பரப்பிலுள்ள ஏகாதிபத்திய. முதலாளித்துவவாதிகள் தங்களது ஆட்சியைத் தொடர்ந்து நிலை நிறுத்த இனவாதம், மதவாதம், நிறவாதம் போன்ற புதிய ஆயுதத்தைப் பயன்படுத்தி வருகின்றார்கள். அதாவது, ஒரு நாட்டின் குறிப்பிட்டவொரு மொழி பேசுவோர், குறிப்பிட்ட பிரதேசங்களில் பண்டுதொட்டு வாழ்வோர்— அதாவது, ஒரு தேசிய இனம் சிறுபான்மையினராக இருப்பின் இச் சிறுபான்மையினரின் தலையில் நாட்டின் சகல குறைபாடுகளையும் கட்டிவிடுவதே ஏகாதிபத்திய. முதலாளித்துவங்களின் நவீன ரக ஆயுதம்.

ஆதிக்கத்திலுள்ள ஒடுக்கு முறையாளர்கள் நாட்டிலுள்ள உழைக்கும் மக்கள் அனைவரையும் இன வேறுபாடின்றிச் சுரண்டி சுகித்து வாழும் நிலையில் ஏற்படும் பொருளாதார, கலாச்சார மற்றும் சகல அழிவுகளுக்கும் இச் சிறுபான்மையினர்தான் காரணம் எனக்காட்டி, பொது மக்களை திசைத் திருப்பி விடுவதே இனவாதம் ஆகும்.

## சிங்கள மக்களின் போராட்டங்கள்

இதன் பாணியிலேயே ஸ்ரீலங்கா தரகு முதலாளித்துவ அரசும் செயற்படுகின்றது என்பதை நீங்கள் உணர்வீர்கள். உங்கள் போராட்ட சக்தியிலே நாம் முழுக்க, முழுக்க நம்பிக்கை கொண்டிருந்தோம் ஒன்றல்ல இரண்டல்ல எத்தனையோ தடவைகள் நீங்கள் இலங்கை முதலாளித்துவ அரசுக்கெதிராக பொங்கி எழுந்தீர்கள் இவற்றையும் நாம் அறிவோம். என்று தோட்டத் தொழிலாளர்களின் பிரஜா உரிமை பறிக்கப்பட்டபோது. இதையே சந்தர்ப்பமாகக் கொண்டு அநாகரிகத் தந்தைகள் தமது அரசியல் பிழைப்புகளுக்காக புதிய அரசியற் கட்சிகளை தொடங்கிருந்த போது— நீங்கள் தோட்டத் தொழிலாளர்களுடன் சேர்ந்து உண்ணாவிரதம் இருக்கச் சென்றீர்களே! இவற்றையும் நாம் அறிவோம். 1964ல் ஸ்ரீமாவோ பண்டாரநாயககாவின் உடல் பயத்தால் நடுங்குமளவுக்கு வேலை நிறுத்தம் மேற்கொண்டீர்களே? ஆனால், இன்று......இனவாதத்தில் மூழ்கடிக்கப் பட்டிருக்கின்றீர்கள். உங்களது தன்னெழுச்சியான போராட்ட எழுச்சிகளைப் பயன்படுத்தி சிலர் தங்கள் பதவி நாற்காலிகளைத்தான் கைப்பற்றிக் கொண்டார்கள்.

## இடதுசாரிகளின் சந்தர்ப்பவாதம்

1958, 1964 காலங்களில் ஸ்ரீலங்கா தரகு முதலாளித்துவ அரசுகளைத் தகர்க்கும் அளவுக்கு உங்கள் போராட்டம் வளர்ந்ததையும், இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஜெர்மனியில் ஒரு காவுஸ்தி போல, இலங்கையில் இருந்த N. M. பெரேரா பதவி நாற்காலியை கைப்பற்றிக் கொண்டதையும் நாம் அறிவோம். இப்படியாக முதலாளித்துவத்திற்கெதிராக பொங்கியெழுந்த நீங்கள் இன்று இனவாதத்தால் மூழ்கடிக்கப்பட்டு தமிழ் பேசும் மக்களை கொன்றொழிக்கிறீர்கள். அது மட்டுமல்ல, தமிழ் பேசும் மக்கள் மீதான ஒடுக்குமுறை இன்று உச்சக் கட்டத்தை அடைந்திருக்கும் வேளையிலும் கூட, இவ் ஒடுக்குமுறைகளைக் கண்டித்து சிங்கள மக்களிடமிருந்து எந்தவிதமான ஒரு வெகுஜனப்போராட்ட இயக்கங்களும் தோன்றி, வெகுஜனப் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடாதது உங்கள் மீதுதமிழ் பேசும் மக்கள் நம்பிக்கை இழக்கவே செய்வர் என்பதில் சந்தேகமேயில்லை.

ஆனாலும், இந்த U. N. P. அரசு பதவியேற்ற பின்னர், தனது பொருளாதாரப் பொறிவின் சுமையை உங்கள் முதுகில் ஏற்றுவதை உணர்ந்துள்ளீர்கள் என்பதையே உங்களின் இன்றைய நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன.

## 1977க்கு பின்னர் சிங்கள மக்கள் மீதான அடக்குமுறைகள்

1980ல் வேலை நிறுத்தம் செய்தபோது 40,000 தொழிலாளர்கள் வீதிக்கு விரட்டப்பட்டார்களே? அதுமாத்திரமா? இதன் பின்னர் எழுந்த வேலை நிறுத்தங்களிலும் தனது குண்டர் படையையே தரகு-முதலாளித்துவ அரசு பாவித்தது. 1976ம் ஆண்டு வீர சூரியாவின் துப்பாக்கிச் சூட்டைத் தூக்கிப்பிடித்து அரசியல் பிழைப்பு நடத்தியவர்கள் இன்று மாணவர்களையே நேரடியாக ஒடுக்குகின்றார்கள். கடந்த வருடம் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பொலிஸ்நிலையம் நிறுவ மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தபோது ஒரு மாணவன் சுட்டுக்கொல்லப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பட்டதையும் நீங்கள் அறிவீர்கள். கடந்த மாதத்தில்கூட ஏழை மாணவர்களின் கல்வியை பறிக்கும் அளவுக்கு U. N. P. அரசு நடந்தது நீதித்துறையிலும் எழுந்த முரண்பாடுகளைத் தீர்ப்பதாக, பிரதம நீதியரசரின் இல்லத்தையே குண்டர்களைக் கொண்டு தாக்கியது. அபிப்பிராய வாக்கெடுப்பில் ஜனநாயக விரோதத் தன்மையைக் கண்டித்து இயக்கம் நடத்தியதற்காக அதில் முன்னணி வகுத்த மதகுருமாரை சட்டக் கண்காணிப்பின்கீழ் கொண்டு வந்தது. ஜனநாயக விரோத முறையில் அவ்வியக்கத்தின் செயற்பாட்டை தடுத்து நிறுத்தியது, அமெரிக்க ஏகாதிபத்தியத்தைக் கண்டித்து சிங்களப் பெண்கள் நடத்திய ஊர்வலத்தை பொலிசாரை கொண்டு அடித்துத் துரத்தியது. இப்படியே தொடர்ந்து .. இன்று மேலதிக வேலை நேரத்திற்காக சம்பள உயர்வு கேட்டு போராடும் 18,000 வங்கி ஊழியர்களை வீதிக்குத் துரத்தத் திட்டமிட்டுள்ளது.

உலக ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகளிலெல்லாம் பிச்சைப் பாத்திரங்களை ஏந்திக் கொண்டு திரிந்து அப்பிச்சைப் பாத்திரங்களில் ஏதாவது நிறைந்ததும் அவற்றை இராணுவத்திற்கே முழுக்க, முழுக்க செலவிடுகின்றனர். கடந்த வாரத்தில்கூட 18கோடி (இந்திய ரூபாய்கள்) ரூபாய்க்கு நவீனரக ஹெலிக்கப்ரர்கள் வாங்கிக் குவித்திருக்கின்றனர். சிங்கள மக்களே! நீங்கள் நினைக்கலாம், தரகு-முதலாளித்துவ அரசானது குவிக்கும் ஆயுதங்களும். இராணுவ விஸ்தரிப்புகளும் தமிழ் மக்களுக்கெதிராகவே பயன் படுத்தப்படும் எனறு ஆனால், இது உங்களுக்கெதிராகவும் பயன் படுத்தத் தொடங்கி விட்டதையும் நீங்கள் உணர்வீர்கள்.

## வங்கி ஊழியர்களின் வேலை நிறுத்தம்

வங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டவுடன் சகல வங்கிகளின் சேவைகளையும் ''அத்தியாவசிய சேவை''யாக அறிவித்திருக்கிறான் பாஸிஸ வெறியன் ஜெயவர்த்தனா. இதன்படி வேலை நிறுத்தத்தை மேற்கொள்பவர்கள் குற்றம் புரிந்தவர்களாகவும், வேலைகளை இழந்தவர்களாகவும் கருதப் படுவார்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். வேலை நிறுத்தத்தின் மூலம் வேலை நீக்கம் செய்யப்படும் இவர்களுக்கு புதியவர்கள் நியமனம் செய்யப்படுவார்கள் என அறிவித்துள்ளார்கள். ஆமாம்! இன்று பெருந்தொகையாக வேலையற்று இருக்கும் சிங்கள மாணவர்களை சாந்தப்படுத்தவே இந்தப் பேச்சுகளும். இந்த நடிப்புகளும்.

அது மாத்திரமல்ல, அரசாங்க ஊழியர்களுக்குப் பொறுப்பாக அரசாங்கம் இருக்காது எனவும் பிதற்றி இருக்கின்றார்கள். உங்களின் இவ்வேலை நிறுத்தம் வங்கிக் கொள்ளைக்குச் சமம் என்றும் பிரதமர் பிரேமதாஸாவும் பிதற்றியுள்ளாரே!

## ஜனநாயக வேடதாரிகள்

இந்த பிரச்சனைகளை ஜனநாயக ரீதியிலேயே தீர்க்க வேண்டும் எனக் கூறியுள்ளார்கள். இன்று சர்வ தேச ரீதியாக ஜனநாயகத்தின் முகமூடிகள் கிழிக்கப்பட்டு வருவதை நீங்கள் உணர்வீர்கள், 1982 செப்டம்பரிலே நிராயுதபாணியான பாலஸ்தீனியர்களை நவீன ஆயுதங்கள் கொண்டு வேட்டையாடிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஏவல் நாய்கள், இனியும் தொடர்ந்து ஜனநாயகம் பற்றிப் பிதற்றுவது இயலாத காரியமாகி விட்டது. இன்று ஆப்கானிஸ்தான் புரட்சியை முறியடிக்க அமெரிக்க ஏகாதிபத்தியம் எடுத்து வரும் அதிகீழ்த்தரமான சதிகளின் மத்தியிலும் அமைதியான கிரெனடாவை கற்பழித்ததன் மத்தியிலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஜனநாயக வேடம் காற்றிலே பறக்கின்றது இன்று நிராயுதபாணியான தமிழ் மக்களைக் கொன்று குவித்து சிரிலங்கா தரகு முதலாளித்துவ அரசும் ஜனநாயகம் பற்றிப் பிதற்றுகின்றது. சிந்தித்துப் பாருங்கள்!

## ஸ்தாபன ரீதியில் திரண்டெழுங்கள்

இந்த முதலாளித்துவ அரசுகள் ஆட்சி செலுத்தும்வரை உங்கள் பிரச்சனைகள் தீர்ந்து விடப்போவதில்லை. சந்தர்ப்பவாத இடதுசாரித் தலைவர்களை இனங்காணுங்கள். நீங்கள் முதலாளித்துவ, ஏகாதிபத்திய அரசுக்கெதிராக கிளர்ந்தெழுந்த போராட்டங்கள் எல்லாம் அடக்கப் பட்டனவே, ஏனென்பதை நீங்கள் உணர்வீர்கள் அதாவது, இவையாவும் தன்னெழுச்சியான போராட்டங்களே! தன்னெழுச்சியான போராட்டங்கள் யாவும் முதலாளித்துவ அரசுகளால் அடக்கப் படுவது தவிர்க்க முடியாத தாகிவிடுகின்றது. நீங்கள் மேற்கொள்ளும் தன்னெழுச்சியான போராட்டங்களை அரசானது சிதைக்காமல் இருப்பதற்காக ஸ்தாபனமாகத் திரண்டெழுங்கள். ஏனெனில், சரியான ஸ்தாபனம் இல்லாத போராட்டம் ஒன்றுமே வெற்றியடைந்ததாக வரலாறு இல்லை.

எனவே ஒடுக்கப்பட்ட சிங்கள மக்களே ஸ்தாபன ரீதியில் திரண்டெழுங்கள். ஏகாதிபத்திய, முதலாளித்துவத்திற்கெதிராக தமிழ் ஈழத்தில் கேட்கும் துப்பாக்கி வேட்டுக்கள் சிரிலங்காவிலும் கேட்கட்டும். உங்களின் நியாய பூர்வமான போராட்டத்திற்கு தமிழ்ஈழ மக்களின் ஆதரவு என்றும் உள்ளதோடு தமிழ்ஈழ மக்கள் தங்களாலான சகலஉதவிகளையும் செய்வார்கள்.

துப்பாக்கிக் குறிகள் மாறும்.

ஜே ஆரின் பௌத்த நெறியும் மாறும்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "அமைவது நிச்சயம் தமிழ் ஈழம்"

ஆழி சூழ் இலங்கையிலே
அமைதி பறி போயினதே
அறமிகு தமிழர் விழிகலங்கும்
அவலநிலை உருவாகினதே,
கற்பு ஒழுக்க நெறிகளுக்கும்
காவல் இன்றி போகிறதே
கனிவே இல்லா அரசின் உருவில்
கம்ச வம்சமொன்று தோன்றிடுதே,
அரசு - கூலிப்படைகள், தனைவைத்தே
தமிழரை குற்றுயிர் ஆக்க துணிந்தனரே
வேலி என்ற போர்வையிலே - தமிழன்
உழைப்பின் பயனையும் மேய்ந்தனரே
அழிவுக்காலம் தமக்கு விரைவில்
வந்துவிட்டதை மறந்தனரே
அகந்தை கொண்டே ஐயோ நெஞ்சில்
அன்பை ஏனோ துறந்தனரே - ஆனால்
கம்சனை அழித்த கண்ணனைப்போல
தமிழ் - காளையர் இங்கு உருவாகினரே
கடமை பெரிதென உயிர் வெறுத்து
கைகளில் துப்பாக்கி ஏந்தினரே,
பண்பாடு காக்க தலைகுனிந்த
பாவையர் நெஞ்சை உயர்த்தினரே
பாரத மண்ணில் கண்ணகிபோல்
இலங்கை ஆட்சியை கவிழ்க்க கிளம்பினரே
குருதி சிந்திட ஆணும் பெண்ணும் - இன்று
உறுதியோடு கூடியபின்,
அறுதியாகக் கூறுகிறேன், - விரைவில்
அமைவது நிச்சயம் "தமிழ் ஈழம்".

-கார்மேகம்நந்தா.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிங்கள மக்களுக்கு உருக்கமான வேண்டுகோள்:-

# கொலைவெறியரசின் தேசிய பாதுகாப்பு நிதிச்சட்டத்தை நிராகரியுங்கள்! நிதி வழங்குவதை நிறுத்திக்கொள்ளுங்கள்!!

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் கூர்மையடைந்துள்ள இவ்வேளையில் இலங்கைக்கு ''உள்நாட்டு யுத்த அச்சுறுத்தல்'' எனக் கூக்குரலிடும் ஸ்ரீலங்கா அரசு சர்வதேச பயங்கரவாதிகளை இலங்கையில் அனுமதித்ததுடன், நவீன பயங்கர ஆயுதங்களையும் குவித்து வருகின்றது.

இதே வேளை - இலங்கையின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், தமிழ்ப் போராளிகளைப் பூண்டோடு அழிக்கவும் **''தேசிய பாதுகாப்பு நிதிச்சட்டம்''** ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்குப் பெரும்பாலும் சிங்கள, மக்கள் மத்தியிலிருந்து பெருமளவு நிதி குவிந்துள்ளது, தற்போது தேசிய பாதுகாப்புநிதி 3 கோடியையும் தாண்டிவிட்டது. இதற்கு இரத்த தானங்கள் கூடச் செய்யப்படுகின்றன.

இனவெறியரசிற்கு தேசியபாதுகாப்பு நிதி வழங்கும் அனைத்து இலங்கை மக்களையும் நாம் கேட்டுக்கொள்வது இதுதான்:-

இந்த இனவெறி முதலாளித்துவ அரசை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்கிவிடாதீர்கள். சிங்கள பெரும்பான்மை மக்களைக் கொண்டு பாராளுமன்றக் கதிரைகளைப் பறிக்கும் நோக்குடனும், முதலாளித்துவச் சுரண்டல் உங்கள் பார்வையில் படாதிருப்பதற்குமாகத்தான் தமிழ்பேசும் இனத்தை கண்மூடித்தனமாக நசுக்கியது இலங்கையரசு! இதன் விளைவுதான் இன்று தமிழ்பேசும் இனம் ஸ்ரீலங்கா பாஸிஸ அரசுக்கெதிராகத் தொடுத்திருக்கும் போர்! இந்த நியாயமான போராட்டத்தை நசுக்கவென்றே உங்களிடமிருந்து நிதி சேகரிக்கின்றது JR. அரசு.

**தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் சிங்கள மக்களுக்கெதிரானதல்ல! ஸ்ரீலங்கா இனவெறியரசின் கொட்டத்தையடக்கி, தமிழ்பேசும் மக்களது இறைமையை மீட்கும் போராட்டமே!**

முதலாளித்துவம், தமது வர்க்க நலனுக்காக எந்த இனத்தையும் ஈவிரக்கமின்றி நசுக்கும். தமது இராணுவத்தின் மூலம் அனைத்து எழுச்சியையும் மழுங்கடிக்கத் தயங்காது.

இன்று தமிழ்பேசும் மக்கள் மீது தமது அராஜகத்தைப் பிரயோகித்துக் கொண்டிருக்கும் அரசு, நாளை நீங்கள் உங்கள் பொருளாதாரக் கஷ்டங்கள் தாளாது அரசுக்கெதிராகக் குமுறி எழும்போது, அரச அராஜகம் உங்களை நோக்கித் திருப்பப்படப் போகின்றது என்பதுதான் நிதர்சனமான உண்மை!

நீங்கள், இப்போது அரசின் தேசிய பாதுகாப்பு நிதிக்கு வாரி வாரி வழங்குகின்றீர்கள்; ஸ்ரீலங்கா இராணுவமோ தமிழ்ப் பகுதியில் மனிதாபிமானமே அற்ற முறையில் நடந்து கொள்கின்றது. அப்பாவித் தமிழ்ப் பேசும் மக்கள் துன்புறுத்தப்பட்டும், கொலை செய்யப்பட்டும், உடமைகள் அழிக்கப்பட்டும் நாளும் பீதியுடன் வாழ்ந்து வருகின்றனர்.

இதற்காகவா நீங்கள் நிதி வழங்குகின்றீர்கள்?

இன்று நீங்கள் வாரியிறைக்கும் நிதிகளே, நாளை உங்களையடக்குவதற்கு, உங்கள் சொத்துக்களைச் சூறையாடுவதற்கு, அழிப்பதற்கு, உயிர் பறிப்பதற்கு உதவப்போகிறது என்பதை மட்டும் மனதிற் கொள்ளுங்கள்.

**எனவே, கொலைவெறியரசின் தேசிய பாதுகாப்பு நிதிச்சட்டமூலத்தை நிராகரியுங்கள்!**

**நிதிவழங்குவதை நிறுத்திக்கொள்ளுங்கள்!!**

**தேசிய பாதுகாப்பு நிதிச் சட்டம், ஒடுக்கப்பட்ட இலங்கை மக்களைப் பூண்டோடு அழிக்கும் சதித் திட்டமே!**

---

தற்போதைய சமூக பொருளாதார நிலைகளே தொடர்ந்து அதன் சுமை தாங்க முடியாது என உணர்ந்து, அதன் தளைகளை உடைத்து உங்களை விடுவிக்க நீங்கள் நடத்தும் போராட்டத்திற்கு நாம் மிக உறுதுணையாக இருப்போம் என்பதை மனப்பூர்வமாக உங்களுக்குத் தெரிவிக்கின்றோம்.

-தமிழ் ஈழ தேசபிதா

(நீதிமன்ற உரையிலிருந்து...)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்